விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka


# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 27
ஒலி 175 வள்ளுவர் ஆண்டு 2057 வைகாசி 29 வெள்ளிக்கிழமை (12.06.2026) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




– செம்மணி மனிதப் புதைகுழி –

## இதுவரை 341 என்புத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டன



(யாழ்ப்பாணம்)

செம்மணி சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி அகழ்வின் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் தொடர்ச்சியாக இடம்பெற்று வரும் நிலையில் இது வரை அடையாளம் காணப்பட்ட மனித என்புக் 03ஆம் பக்கம் பார்க்க

## பசிலுக்கு சர்வதேச பிடியாணை முறையாக விண்ணப்பிக்குக!

### சி.ஐ.டிக்கு நீதிபதி அறிவுறுத்தல்

(கொழும்பு)

சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்தின் நிதியை முறைகேடாகப் பயன்படுத்திய சம்பவம் தொடர்பாக முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு எதிராக சர்வதேச பிடியாணை ஒன்றைப் பெறவேண்டுமாயின் அதற்குரிய சத்தியக்கடதாசியை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியும்என கொழும்பு கோட்டை நீதிவான் பசன் அமரசேன அறிவித்துள்ளார்.

இந்தச் சம் 15ஆம் பக்கம் பார்க்க

## நீதியரசர் நியமனங்கள்; பின்னடிக்கிறது அரசாங்கம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் விளக்கம்



(கொழும்பு)

உயர் நீதிமன்றம் மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்றங்களில் தலா நான்கு நீதியரசர் பதவிகள் ஆறு மாதங்களுக் 15ஆம் பக்கம் பார்க்க

# குமரன் பத்மநாதன் வைத்திருந்த தொன் கணக்கான தங்கம் எங்கே?

### அதிரடி விசாரணை ஆரம்பம்
### சரத் பொன்சேகாவிடம் வாக்குமூலம்



(கொழும்பு)

விடுதலைப் புலிகள் அமைப்பின் சர்வதேச நிதிப் பொறுப்பாளராக இருந்த 'கே.பி.' என அறியப்படும் குமரன் பத்மநாதன் கைது செய்யப்பட்டதைத் தொடர்ந்து அவரிடமிருந்து பறிமுதல் செய்யப்பட்டதாகக் கூறப்படும் பெருமளவிலான தங்கத்தின் நிலை குறித்து அதிரடி விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (16ஆம் பக்கம் பார்க்க)

## ஈரானின் எண்ணெய் வளம் இன்று அமெரிக்கா வசமாகும்

### ட்ரம்ப் சூளுரை



(வோஷிங்டன்)

ஈரான் மீது இன்று இரவு அமெரிக்கா மிகக் கடுமையான தாக்குதலை நடத்தும் என்று அமெரிக்க ஜனாதிபதி 15ஆம் பக்கம் பார்க்க

## வலிகாமம் வடக்கு மக்கள் இடம்பெயர்ந்து 36 ஆண்டுகள்

### போராட்டத்துக்கும் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலி.வடக்கு மக்கள் தமது காணிகளில் இருந்து இடம்பெயர்ந்து எதிர்வரும் 15ஆம் திகதியுடன் 36 ஆண்டுகள் பூர்த்தியடையும் நிலையில், உயர் பாதுகாப்பு வலயமாக உள்ள தமது காணிகளை விடுவிக்கக்கோரி எதிர்வரும் 15ஆம் திகதி திங்கட்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று இடம் 03ஆம் பக்கம் பார்க்க

## ஒன்றுபட்டுச் செயற்படுவதே தற்காலத்துக்குச் சிறந்தது



### முன்னாள் ஜனாதிபதி ரணில்

(கொழும்பு)

அனைத்து அரசியல் சக்திகளும் கட்சி வேறுபாடுகளைத் தாண்டி ஒன்றிணைந்து ஒருமித்த பலமாகச் செயற்பட வேண்டியது காலத்தின் கட்டாய 15ஆம் பக்கம் பார்க்க

## நீதிபதிகளின் ஓய்வு வயதை அதிகரிக்க அமைச்சரவை அனுமதி பெறப்படவில்லை

### நீதி அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

மேன்முறையீட்டு நீதிமன்றம் மற்றும் உயர் நீதிமன்றம் உள்ளிட்ட நீதித்துறை கட்டமைப்பில் உள்ள நீதிபதிகளின் ஓய்வுபெறும் வயதை அதிகரிப்பதற்கு அமைச்சரவையின் உத்தியோகபூர்வ அனுமதி பெறப் 15ஆம் பக்கம் பார்க்க

## சங்கீத்தனுக்கு பிணை வழங்க அரச சட்டத்தரணி எதிர்ப்பு

### 23ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சியைச் சேர்ந்த சொல்லிசைப் பாடகர் சங்கீத்தனை பிணையில் விடுவிக்க வேண்டும் எனக் கோரி, யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்ட பிணை மனு மீதான விசாரணை நேற்றைய தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது சொல்லிசைப் பாடகர் சார்பாக 02ஆம் பக்கம் பார்க்க

## அதிக காற்றுடன் சீற்றம் மிகு கடல்

### சிவப்பு எச்சரிக்கை விடுப்பு

(யாழ்ப்பாணம்)

காங்கேசன் துறையிலிருந்து மன்னார் ஊடாக கற்பிட்டி வரையான கடற்பரப்புகளுக்கு வளிமண்டலவியல் திணைக்களத்தினால் சிவப்பு எச்சரிக்கை 15ஆம் பக்கம் பார்க்க

## திருவள்ளுவர் கலாசார மையம் யாழ்.மாநகர சபைக்கே உரித்து

### சபையில் நேற்று தீர்மானம் நிறைவேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் திருவள்ளுவர் கலாசார மையம் யாழ். மாநகர சபைக்கே உரித்துடையது. அதனை யாழ். மாநகர சபையின் பொறுப்பில் எடுக்கும் நடவடிக்கையை விரைந்து செய்ய வேண்டும் என யாழ்.மாநகர சபையின் நேற்றைய அமர்வில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை 09.00 மணிக்கு யாழ்.மாநகரசபையின் மாதாந்த அமர்வு யாழ் மாநகர 15ஆம் பக்கம் பார்க்க

நடுவு நிலை தவறாது நெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சையின் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியாளர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதன்படி, 2026 க.பொ.த உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகளுக்காக, https://onlineexams.gov.lk/eic என்ற இணையத்தள இணைப்பின் ஊடாகக் குறிப்பிடப்பட்டுள்ள திகதிகளில் இணைய வழி விண்ணப்பங்கள் கோரப்படுவதாக இலங்கைப் பரீட்சைத் திணைக்களத்தினால் அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளது.

விண்ணப்பம் கோரல் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில் எதிர்வரும் 22 ஆம் திகதி வரை விண்ணப்பிக்க முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை 2026 ஆம் ஆண்டுக்கான க.பொ.த உயர்தரப் பரீட்சை ஓகஸ்ட் 10 முதல் செப்டெம்பர் 5 வரை நடைபெறும் என்று பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த நிலையில் உயர்தரப் பரீட்சையை ஒத்திவைக்க சில குழுக்கள் கோரிய போதிலும், அது திட்டமிட்டபடி நடைபெறும் என்று கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன உறுதிப்படுத்தியுள்ளார். (நி)

# எதிர்க்கட்சித் தலைவரை சந்தித்த இந்தியப் பிரதி உயர்ஸ்தானிகர்



(கொழும்பு)

இலங்கையில் தனது பதவிக் காலத்தை நிறைவு செய்து விரைவில் இந்தியா திரும்பவுள்ள இந்தியப் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்தியஞ்சல் பாண்டே, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவைச் சந்தித்துக் கலந்துரையாடினார்.

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இச்சந்திப்பு அண்மையில் நடைபெற்றது. இலங்கையில் தான் கடமையாற்றிய காலப்பகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் அவரது தரப்பினரிடமிருந்து தனக்குக் கிடைத்த அளப்பரிய ஒத்துழைப்பு மற்றும் ஆதரவிற்காக, இந்தியப் பிரதி உயர்ஸ்தானிகர் கலாநிதி சத்தியஞ்சல் பாண்டே இதன்போது தனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்.

இரு நாடுகளுக்கும் இடையிலான இருதரப்பு உறவுகள் மற்றும் பரஸ்பர ஒத்துழைப்புகள் குறித்தும் இச்சந்திப்பின் போது சுமுகமாக கலந்துரையாடப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ந-7)

## சங்கீத்தனுக்கு...

மன்றில் முன்னிலையான சட்டத்தரணி கேசவன் சயந்தன், சங்கீத்தனை சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் சாவகச்சேரி பொலிஸார் முற்படுத்தும்போது தாக்கல் செய்த B அறிக்கையிலுள்ள சில சட்ட முரணான விடயங்கள் சிலதைக் குறிப்பிட்டு அது சங்கீத்தனுக்கு தொடர்ந்தும் அநீதி இழைக்கப்படுவதாகும். அது பாரதூரமான நீதிப்பிறழ்வு எனவும் தனது சமர்ப்பணத்தில் குறிப்பிட்டார்.

அத்துடன் எதிர்மனுதாரர்களான சாவகச்சேரி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி, யாழ். மாவட்டக் குற்ற விசாரணை பொறுப்பதிகாரி மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருக்கான அறிவித்தலை விரைவில் அனுப்புமாறும் மன்றில் விண்ணப்பம் செய்தார்.

இதன்போது அரச தரப்பு சட்டத்தரணி பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளோரை கொழும்பு மேன்முறையீட்டு நீதிமன்றம் ஊடாகவே விடுவிக்க முடியும் என முன்னைய மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்புக்களை உதாரணம் காட்டி தனது சமர்ப்பணத்தை முன்வைத்தார்.

எனினும் சட்டத்திருத்தங்களுக்கு அமைய மேல்நீதிமன்று ஊடாகவும் பிணையைப் பெற முடியும் என சட்டத்தரணி கேசவன் சயந்தன் வாதிட்டிருந்தார்.

இந்நிலையில் இருதரப்பு வாதங்களையும் செவிமடுத்த மன்று, எதிர்வரும் 23ஆம் திகதியை அறிவித்தல் திரும்பும் திகதியாகக் குறிப்பிட்டு அந்தத் திகதிக்கு வழக்கினை ஒத்தி வைத்துள்ளது.

இதன் பின் ஊடகங்களைச் சந்தித்த சட்டத்தரணி சயந்தன், சொல்லிசைக் கலைஞன் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள நிலையில் குறித்த வழக்கு எதிர்வரும் 17ஆம் திகதி சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் சொல்லிசை கலைஞனின் கைது, அடிப்படை உரிமைமீறல் என உயர் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிலையில் குறித்த வழக்கு இன்று அல்லது எதிர்வரும் திங்கட்கிழமை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். (ந-7)


# மரண அறிவித்தல்

## திருமதி அன்னபூரணம் நாகதம்பி



மருதங்கேணியைப் பிறப்பிடமாகவும் நாகர்கோவிலை வசிப்பிடமாகவும் கல்லடி ஒழுங்கை, பருத்தித்துறையை தற்காலிக முகவரியாகவும் கொண்ட திருமதி அன்னபூரணம் நாகதம்பி அவர்கள் நேற்று 11.06.2026 வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்துரை - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகளும் காலஞ்சென்ற குமரேசு நாகதம்பியின் பாசமிகு மனைவியும் செல்லம்மா, நேசரத்தினம், நேசமணி, தங்கேஸ்வரி, குமரேசு, மயில்வாகனம், புஸ்பலீலா, பத்மநாதன் ஆகியோரின் தாயாரும் காலஞ்சென்றவர்களான மயில்வாகனம், சுப்பிரமணியம், பொன்னுத்துரை மற்றும் ஸ்ரீரஞ்சினி, உமாவதி, நந்தினி, அமிர்தராணி ஆகியோரின் மாமியாரும் சிவகுகதாசன், சிவமணிமோகன், சிவகுமார், சிவகரன், சிவதனுசா, அன்பரசி, இளவரசி, இளங்குமரன், நேசரஞ்சினி, நேசரஞ்சன், நேசராசா, நேசரூபன், தேவகி, வாசுகி, சாரங்கன், லக்ஷிகா, குபேரன், துவாரகா, துளசிகா ஆகியோரின் பேர்த்தியும் சகானா, சாதனா. அபிராஜ், சானுகா, நெயாஷ், கவின், கவிசா, மயிலினி, மகாலக்சுமி. ஸ்ரீஹரி, மிதுர்ஸ், மகிழ், விருத், விநேயா,ஜெனுஷா, சிவகிரிவ்ஷ், கிருஷானி, அபிராமி, ராகவி, ஹரீஸன், சுரபி, சர்வேஷ், ஷான்வி, ஆதிபன், ஆகீசன், ஆருத்ரா, தட்சகன், ருத்ரேகா, ருத்ரேஸ், லோஜித், நட்சத்திரா ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2026) வெள்ளிக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10.00 மணிக்கு கோரியடி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

கல்லடி ஒழுங்கை,
தும்பளை வீதி,
பருத்தித்துறை.

தகவல் :
குடும்பத்தினர்
077 670 1175, 075 367 1349

(2409)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## அமெரிக்கா-ஈரான் போர்ப்பதற்றம்

# உலக சந்தையில் அதிரடியாக உயர்ந்த எண்ணெய் விலை



(டெஹ்ரான்)

**ஈரானுக்கு எதிராக அமெரிக்கா மீண்டும் ஒரு பாரிய வான்வழித் தாக்குதலை நடத்தியதைத் தொடர்ந்து, அதற்குப் பதிலடியாக உலக எரிசக்தி போக்குவரத்தாக விளங்கும் 'ஹோர்முஸ் நீரிணையை' ஈரான் மூடியதைத் தொடர்ந்து உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை நேற்று மிக வேகமாக உயர்ந்துள்ளது.**

கடந்த ஏப்ரல் மாதத் தொடக்கத்தில் எட்டப்பட்ட ஒரு தற்காலிகப் போர் நிறுத்தத்திற்குப் பின்னர், அமெரிக்க இராணுவம் ஈரானில் உள்ள பல இலக்குகள் மீது இந்தத் தாக்குதலை நடத்தியுள்ளது.

இது இரு நாடுகளுக்கும் இடையே மீண்டும் ஒரு பெரிய அளவிலான போருக்கான அறிகுறிகளைத் தோற்றுவித்துள்ளது.

ஹார்முஸ் நீரிணை மூடப்பட்ட செய்தி வெளியான சில மணித்தியாலங்களில், உலக சந்தையில் கச்சா எண்ணெய் விலை ஒரு பீப்பாய்க்கு 2 டொலருக்கும் அதிகமான தொகையால் அதிகரித்துள்ளது.

எண்ணெய் விநியோகக் கப்பல்கள் மற்றும் இதர வணிகக் கப்பல்கள் உட்பட அனைத்து வகையான கப்பல்களின் போக்குவரத்திற்கும் ஹார்முஸ் நீரிணை முழுமையாக மூடப்படுவதாக ஈரானின் கூட்டு இராணுவத் தலைமையகம் உத்தியோகபூர்வ அறிக்கை விடுத்துள்ளது.

உலகளவில் கொண்டு செல்லப்படும் கச்சா எண்ணெய்யில் பெரும் பகுதி இந்த நீரிணை வழியகவே கடத்தப்படுவதால், இந்த முட்டுக்கட்டை உலகப் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என அஞ்சப்படுகிறது. (நி)



# INVITATION FOR BID 2026/07

## VALIKAMAM EAST PRADESHIYA SABHA

## NORTHERN PROVINCE

1. The **Chairman, Divisional Procurement Committee,** on behalf of the Valikamam East Pradeshiya Sabha, Puttur invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below. All the projects will be funded via **PSDG**.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB)**, To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of Building construction for grade mentioned in the table below.
   **"Bidders Shall also register themselves with the Register of Public Contracts Sri Lanka, in terms of the Public Contract Act No 03 of 1987.**
3. Qualification' requirements are indicated in section 4 of the Procurement document. Additional details are provided in the Bidding Schedule (Section 5) for SBD 3 Documents.
4. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the Procurement documents at the same place on any working days from **2026-06- 12 To 2026-06-25** during **09:00 hrs and 15:00 hrs**
5. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Valikamam East Pradeshiya Sabha**, Puttur **(T.P:021-205-8865, e.mail: pmdveps @ gmail. Com)** from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table below upon payment of non-refundable fees as mentioned in the table below. The method of payment will be by cash.
6. Bids (Original & Duplicate) shall be delivered or sent by registered post to the **Chairman, Divisional Procurement Committee**, Valikamam East Pradeshiya Sabha, Puttur on or before as stated in table below. Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Pre-Bid Conference will be held at **Conference Hall, Valikamam East Pradeshiya Sabha**, Puttur as stated in table below.
8. Bids shall be accompanied by a Bid security/ Refundable cash Deposit/ Bank Draft as per the information given in the Tables.

| | | |
|---|---|---|
| | Document Issuing/Purchasing Period | From 2026-06-12 To 2026–06-25 |
| | Pre-Bid Conference | At 10.30 A.M on 2026-06-19 |
| | Closing and Opening of Bids | At 2.00 P.M on 2026-06-26 |

| Bid ID | Description of Work | Estimated Cost (Rs.) In Million (Without VAT) | Contract Period (Days) | Grade Required | Non-Refundable Fee (Rs.) | Required Bid Security/ Bank Draft / Security Deposit | | Bid Validity Period (Days) |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Security Amount (Rs.) | Validity Period | |
| PSDG/NP/JAF/VEPS/2026/LAR/01 | Reconstruction of Anthiranai Road – Stage I | 9.18 | 105 | C8 or above (Highway) | 4,000.00 | 92,000.00 | 09.10.2026 | 77 |

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Valikamam East Pradesiya Sabha, Puttur.** (C-5818) **12.06.2026**


## இதுவரை...

கூட்டுத் தொகுதிகளின் எண்ணிக்கை 340 ஐ அண்மித்துள்ளது.

இந்நிலையில் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வின் 22ம் நாள் அகழ்வுகள் நேற்று இடம்பெற்றன.

இது குறித்து ஊடகங்களுக்குக் கருத்துரைத்த சட்டத்தரணி ரனிதா,

செம்மணி மனிதப் புதைகுழியில் நேற்று சிறுவருடையது உள்ளடங்கலாக ஒன்பது மனித என்புக்கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் புதிதாக இரண்டு மனித என்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டன.

அத்துடன் ஒரு மனித என்புக் குவியலும் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிவான் எஸ்.லெனின் குமார் முன்னிலையில் தொல்லியல் பேராசிரியர் ராஜ் சோமதேவா, சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், ருகுணு பல்கலைக்கழக தொல்லியல் துறை மாணவர்கள், தடயவியல் பொலிஸார் உள்ளிட்ட குழுவினர் அகழ்வுப் பணிகளில் பங்கேற்றனர்.

இதுவரை மொத்தமாக 341 மனித என்புக் கூட்டுத் தொகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளது. மேலும் 327 மனித என்புக் கூடுகள் முழுமையாக அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளதுடன் 23 மனித என்புக் குவியலும் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளது என்றார். (ந-7)

## வலிகாமம்...

பெறவுள்ளது.

இது குறித்து கருத்துரைத்துள்ள மயிலிட்டி மீள் குடியேற்ற அபிவிருத்திக் குழு,


நாம் எமது ஊரில் இருந்து விரட்டப்பட்டு தற்போது 36 ஆண்டுகள் நிறைவடைந்து விட்டன.

ஆனால் J/251, J/246 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகள் இன்னமும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை.

இந்நிலையில் எதிர்வரும் திங்கட்கிழமை யாழ்.மாவட்டச் செயலக முன்றலில் மாபெரும் அறவழிப் போராட்டத்தை முன்னெடுக்கத் திட்டமிட்டுள்ளோம் என்றார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தம்புள்ள சுப்பர் மாகாண அணியில் மகாஜன மைந்தன் தரணிகன்



2026 ஆம் ஆண்டிற்கான 19 வயதிற்குட்பட்டோருக்கான சுப்பர் மாகாண அணிகளுக்கிடையிலான கிரிக்கெட் தொடருக்காக மகாஜனக் கல்லூரியின் உதய குமார் தரணிகன் தம்புள்ள சுப்பர் மாகாண அணிக்காக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

# தேசிய மட்ட எறிபந்து போட்டிக்கு யூனியன் கல்லூரி அணி தெரிவு




மாகாணமட்ட எறிபந்து போட்டி நேற்று மன்னார் அடம்பன் மத்திய கல்லூரியில் நடைபெற்றது

இப்போட்டியில் 17 வயதின் கீழ் ஆண்கள் பிரிவில் யூனியன் கல்லூரி அணி வெற்றி பெற்று தேசியமட்ட போட்டிக்கு தெரிவாகி உள்ளது.

கனகராயன் குளம் மகாவித்தியாலத்துடன் போட்டியிட்டு 23:25 என்ற அடிப்படையில் வெற்றி பெற்று சாதனை படைத்துள்ளது. (நி-105)

## பெண்களுக்கான வலைப்பந்தாட்டம்

# சம்பியன் கிண்ணத்தை சுவீகரித்தது வவு.சைவப்பிரகாச மகளிர் கல்லூரி




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அணி இரு பிரிவுகளில் சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்து சாதனை படைத்துள்ளது.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான வலைப்பந்தாட்ட போட்டியின் இறுதியாட்டங்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை மன்னார் முருங்கன் மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 18 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அணி முதலாம் இடத்தையும், பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை அணி இரண்டாம் இடத்தையும், அராலி சரஸ்வதி இந்துக் கல்லூரி அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது.

20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி அணி முதலாம் இடத்தையும், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி அணி இரண்டாம் இடத்தையும், பரந்தன் இந்து மகா வித்தியாலய அணி மூன்றாம் இடத்தையும் பெற்றுள்ளது. (நி- 90)

# facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3372

Search for people, places and things

### தர்மிகா

எனக்கு ஒரு சந்தேகம்




இந்த ஆடு, மாட்டுக்கெல்லாம் வாய் இருக்கத்தானே செய்யுது... பிறகு எதுக்கு அத வாயில்லாத ஜீவன் என்று சொல்லுறாங்க

### யதுஷன்

அவ்வளவு எளிதில் அமைந்து விடுவது இல்லை!
ஆண்களுக்கு வேலையும்!



பெண்களுக்கு சேலையும்!



### தனுஜன்

ஏறுவரிசை, இறங்குவரிசை படுத்துக



ஏறு வரிசை :- கேஸ் டீசல் பெட்ரோல் தங்கம் வரிகள் ஊழல் விலைவாசி கடன் கஷ்டங்கள்

இறங்கு வரிசை :- மனிதன் வாழ்வாதாரம் விவசாயம் பொருளாதாரம்

### தேனுஜா

முடி வளர்ந்தால் வெட்டிக்கலாம்
நகம் வளர்ந்தால் வெட்டிக்கலாம்
ஆனா அறிவு வளர்ந்தா?



கவலைப்படாதீங்க... உங்க மனசுக்கு அந்தப் பிரச்சினை வராது

### குமுதினி

பிறகு செலவழிக்கலாம் என்று பணத்தை சேமிக்க முடியும்.

பின்னால் வாழ்ந்து கொள்ளலாம் என்று ஒரு நாளைக்கூட சேமிக்க முடியாது.

### ஆரிஷ்

**Husband:** என்ன டின்னர்?
**Wife:** மதியம் மிச்சமான சோத்துல முட்டையை, மிளகு போட்டு தாளிச்சு வச்சு இருக்கேன்..
**Husband:** எனக்கு பசிக்கலை.!
அடுத்த நாள்..
**Husband:** என்ன டின்னர்?
**Wife:** பெப்பர் எக் ஃப்ரைட் ரைஸ்
**Husband:** அட சூப்பர்... 😊😊
நீதி: சோறு வைக்கிறது பெருசு இல்லை... அதுக்கு பேரு வைக்கறது தான் பெருசு.! 😊😊

யாரோ

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# எல்நினோ நிலமையால் நீரைச் சிக்கனமாக பயன்படுத்துமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

எல்நினோ நிலைமை காரணமாக, நீரை சிக்கனமாக பயன்படுத்துமாறு விவசாய திணைக்களம் விவசாயிகளை அறிவுறுத்தியுள்ளது.

குறுகிய கால அறுவடை பயிர்களை பயிரிடுமாறு விவசாய பணிப்பாளர் நாயகம் துஷார விக்ரமாரச்சி ஆலோசனை வழங்கியுள்ளார்.

நீரை சேமிக்கும் நடவடிக்கைகள் குறித்து விவசாயிகளுக்கு ஏற்கெனவே ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதாக அவர் சுட்டிக்காட்டினார்.

எல்நினோ நிலைமை 7 முதல் 11 மாதங்கள் வரை நீடிக்கும் சாத்தியமுள்ளதால், எதிர்வரும் பெரும்போக அறுவடை நிறைவடைந்ததும் நிலத்திலுள்ள ஈரப்பதத்தை கொண்டு அடுத்த போகத்திற்கு நீரை சேமித்துக்கொள்ள முடியுமென விவசாய பணிப்பாளர் நாயகம் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி)

## எல்-நினோ தாக்கம் ஜனாதிபதி தலைமையில் விசேட கலந்துரையாடல்



(கொழும்பு)

எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய எல்-நினோ நிலைமையினால் ஏற்படக்கூடிய தாக்கம் மற்றும் அதனை எதிர்கொள்வதற்காக நிறுவனங்களுக்கு உள்ள திட்டங்கள் குறித்து ஆராயும் கலந்துரையாடல் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தலைமையில் நேற்று முற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

எதிர்காலத்தில் ஏற்படக் கூடிய எல்-நினோ நிலைமையானது இந்நாட்டின் உணவுப் பாதுகாப்பு, குடிநீர் மற்றும் வலுசக்தி ஆகிய துறைகளில் ஏற்படுத்தும் தாக்கம் குறித்தும் அத்துறைகளை முகாமைத்துவம் செய்வதற்கு எடுக்கப்பட வேண்டிய அவசர நடவடிக்கைகள் குறித்தும் இங்கு விரிவாக ஆராய்ந்ததுடன், அதற்குரிய திட்டங்களைத் தயாரித்து சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு இதன்போது ஜனாதிபதி அறிவுறுத்தல் வழங்கினார்.

டித்வா சூறாவளி மற்றும் மத்திய கிழக்கு யுத்த நிலைமைகளின் போது ஏற்பட்ட சவால்களை எதிர்கொண்டது போன்றே, வெளிப்புற சவாலான இந்த உலகளாவிய நிலைமையையும் முகாமைத்துவம் செய்ய முடியும் என்பதையும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார்.

அத்துடன் முறையான திட்டங்கள் மற்றும் செயற்பாடுகள் மூலம் ஏற்படக்கூடிய எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ள முடியும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (நி)

## சஷி வீரவன்சவின் மேன்முறையீடு நிராகரிப்பு



(கொழும்பு)

போலியான ஆவணங்களைச் சமர்ப்பித்து முறையற்ற தூதரகக் கடவுச்சீட்டைப் பெற்றதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்காக விதிக்கப்பட்ட இரண்டு வருட சிறைத்தண்டனை மற்றும் அபராதத்திற்கு எதிராக சஷி வீரவன்ச தாக்கல் செய்த மேல்முறையீட்டை கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது.

தீர்ப்பை வழங்கிய மேல் நீதிமன்ற நீதிபதி மஞ்சுல திலகரத்ன, கொழும்பு நீதித்துறை நடுவர் நீதிமன்றம் முன்னர் வழங்கிய தீர்ப்பை உறுதி செய்தார். 2022 ஆம் ஆண்டில், முன்னாள் அமைச்சர் விமல் வீரவன்சவின் மனைவி சஷி வீரவன்ச, போலிக் கடவுச்சீட்டுக் குற்றச்சாட்டில் குற்றவாளி என நீதவான் நீதிமன்றம் கண்டறிந்து, அவருக்கு இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையும் ஒரு லட்சம் ரூபா அபராதமும் விதித்தது.

இந்த நிலையில் நேற்றைய தீர்ப்பு முந்தைய முடிவை உறுதிசெய்து, சிறைத் தண்டனையையும் அபராதத்தையும் அப்படியே நிலைநிறுத்துகிறது. (நி)

## 2026 மே மாத வருவாய் இலக்கை விஞ்சிய இலங்கை சுங்கத் திணைக்களம்

(கொழும்பு)

2026 மே மாதத்தில் இலங்கை சுங்கத் திணைக்களமானது தனது எதிர்பார்க்கப்பட்ட 187.8 பில்லியன் ரூபா வருவாய் இலக்கினை விஞ்சி 217.9 பில்லியன் ரூபாவை வசூலித்துள்ளது.

இது 16% அதிகரிப்பு ஆகும் என சுங்கத் திணைக்களத்தின் அதிகாரப்பூர்வ தரவுகள் வெளிப்படுத்தியுள்ளன.

இந்த வலுவான செயற்பாட்டின் காரணமாக, 2026 ஆம் ஆண்டின் முதல் ஐந்து மாதங்களில் ஒட்டுமொத்த வருவாய் கடந்த ஆண்டின் இதே காலகட்டத்துடன் ஒப்பிடுகையில் இலக்கை 44% தாண்டி 1,143.7 பில்லியன் ரூபாவாக உயர்ந்துள்ளது.

கார் இறக்குமதி குறையும் என்ற எதிர்பார்ப்புகளின் காரணமாக, சுங்கத்துறை தனது ஆண்டு இலக்கான 2,207 பில்லியன் ரூபாவில் ஏற்கனவே 51.8% ஐ எட்டியுள்ளது.

இந்த இலக்கு, கடந்த ஆண்டின் சாதனையான 2,551 பில்லியன் ரூபாவை விடக் குறைவாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கடுமையான அமுலாக்கம், மேம்படுத்தப்பட்ட மதிப்பீட்டு நடைமுறைகள் மற்றும் பல ஆண்டுகால சுருக்கத்திற்குப் பின்னர் இறக்குமதி அளவுகளில் ஏற்பட்ட மீட்சி ஆகியவையே இந்த அதிகரிப்புக்குக் காரணம் என அதிகாரிகள் கூறுகின்றனர்.

கடந்த ஆண்டு, சுங்கத்துறை தனது திருத்தப்பட்ட இலக்கான ரூ. 2,241 பில்லியனை ரூ. 300 பில்லியனுக்கும் அதிகமாகத் தாண்டியது.

இது 2024 ஆம் ஆண்டின் ரூ. 1,553 பில்லியன் என்ற இலக்கிலிருந்து 64.2% உயர்வாகும்.

2026 ஆம் ஆண்டிற்கான இலக்கு குறைவாக இருந்தபோதிலும் சுங்கத்துறை மற்றொரு வலுவான ஆண்டை வழங்குவதற்கான பாதையில் உள்ளது என்பதை அண்மைய புள்ளிவிவரங்கள் சுட்டிக்காட்டுகின்றன. (நி)


இளங்கோ கழகத்தாரின் இதயக் குமுறல்



அமரர்.இலட்சுமிப்பிள்ளை கணபதிப்பிள்ளை

ஊர்வாழ வாழ்ந்த உத்தமனைக் கரம்பற்றி
பேரான பெருவாழ்வு வாழ்ந்த எங்கள் தாயவளே
ஆராத காதல் மூச்சுப்புலத்தான் அடிபற்றி அவனருளால்
பார்போற்றும் பிள்ளைகளைத் தந்தவளே எங்கள் தாயவளே
நம்குலத்தின் மூத்தகொடி நல்லறத்தைக் காத்த கொடி
அத்தன் சிவலோகம் தஞ்சமெனச் சென்றதடி
சித்தம் மகிழ்ந்து கழகம் உயர்வெய்த அன்பால்
சத்தம் இன்றி நீ செய்த பணிகள் எத்தனையோ! எத்தனையோ!
கண்ணகிக்கு விழாக்கோலம் காணவென பஞ்சண்ணை
விண்ணுலகே தஞ்சமெனச் சென்றிட்டாய் கலங்குகிறோம்
மன்னை உயிரென மதித்திங்கு வாழ்ந்தவளே
கண்ணகியாள் கழல் சென்று காத்திடுவாள் எமைத் திண்ணம்
ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

தென்புலோலி, அகில இலங்கை இளங்கோ கழகத்தினர்

(C-5815)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் சிலப்பதிகார விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கை இளங்கோ கழகம் நடத்தும் புலமை ஒலி - 2026 சிலப்பதிகார விழா இன்று, நாளை மற்றும் நாளை மறுதினம் ஆகிய 3 தினங்களும் மாலை 4 மணிக்கு கரவெட்டி துன்னாலை அல்லையம்பதி வடிவேலர் மண்டபத்தில் நடைபெறும்.

முதல் நாள் நிகழ்வு இன்று வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு தமிழ்தாத்தா கந்த முருகேசனார் அரங்கில் யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் தி. வேல்நம்பி தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் தொடக்கவுரையை தென்மராட்சி இலக்கிய அணி ஸ்தாபித அமைப்பாளர் பேராசான் ச.மார்க்கண்டு ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து சிலம்பிசை கோ. கோகிலரதன் தலைமையில் "இன்றைய இளைய தலை முறையினரிடத்துப் பெரிதும் புகட்ட வேண்டியது" எனும் தொனிப்பொருளில் சிந்தனை அரங்கும் கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ் தலைமையில் "சிலப்பதிகாரம் எம் நெஞ்சில் நிலைத்திருக்கப் பெரிதும் காரணம் எனும் கருப்பொருளில் பட்டிமண்டபமும் நடைபெறும்.

நிகழ்வில் புலமை ஒலி உயர்விருது பேராசிரியர் சி. சிவலிங்கராஜா அவர்களுக்கும் கல்விப்பணிக்கான உயர் விருது பண்டிதர் கலாநிதி செ. திருநாவுக்கரசு அவர்களுக்கும் இலக்கியப்பணிக்கான உயர் விருது திருக்குறள் கலாநிதி ஆ.வடிவேலு அவர்களுக்கும் வழங்கப்படவுள்ளது. (8)

# 'கலைஞனின் குரல்' வெளியீடு

(யாழ்ப்பாணம்)

முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்றத்தின் "கலைஞனின் குரல்" மாதாந்தப் பத்திரிகை (இதழ்-11) வெளியீடு எதிர்வரும் 15 ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொழும்புத்துறை தென்றல் விருந்தகத்தில் நடைபெறவுள்ளது.

கலைஞனின் குரல் ஆசிரியர் இரா.மதிகரன் தலைமையில் நடைபெறும் இந் நிகழ்வில் சிறப்புரை முத்தமிழ் கலைஞர் மேம்பாட்டு மன்ற கணக்குப் பரிசோதகர் பெனடிக்ற் பீற்றர் போல், வெளியீட்டுரை யாழ். இந்துக் கல்லூரியின் முன்னாள் உப அதிபர் நா.விமலநாதன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (8)

# மண்டைதீவு படுகொலையின் 40 ஆவது ஆண்டு நினைவேந்தல்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மண்டைதீவு கடற்பரப்பில் படுகொலை செய்யப்பட்ட 31, குருநகர் கடற்றொழிலாளர்களின் 40ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வுகள், குருநகரில் அமைக்கப்பட்டுள்ள நினைவுத் தூபியில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்றது.

குருநகர் ஆலய பங்குத் தந்தை திருப்பலி ஒப்புக் கொடுத்ததை அடுத்து, மெழுகு வர்த்தி, தீபம் ஏற்றி மலர் தூவி மக்கள் அஞ்சலி செலுத்தினர்.

கடந்த 1986ஆம் ஆண்டு ஜூன் 10ஆம் திகதி குருநகர் பகுதியில் இருந்து "தூயஒளி" படகில் கடலுக்குச் சென்ற 31 கடற்தொழிலாளர்கள் மண்டைதீவுக் கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் படுகொலை செய்யப்பட்டனர்.

படுகொலையானவர்களின் நினைவாக குருநகரில் அமைக்கப்பட்டுள்ள நினைவு தூபியிலேயே அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெற்றன. (8-33)

# மகோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புன்னாலைக்கட்டுவன் ஆயாக்கடவை சித்திவிநாயகர் ஆலய வருடாந்த மகோற்சவம் எதிர்வரும் 19 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.15 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 11 தினங்கள் நடைபெறும்

எதிர்வரும் 28 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் திங்கட்கிழமை காலை 10.30 மணிக்கு தீர்த்ததிருவிழாவும் நடைபெறும். (8)

# அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை தோதரவையம்பதி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் நேற்றைய தினம் ஆரம்பமாகியது.

12 தினங்களைக் கொண்ட அலங்கார உற்சவமானது எதிர்வரும் 22ஆம் திகதி காலை 7.00 மணிக்கு 108 சங்காபிஷேகமும், மாலை 7. 30 மணிக்கு விசேட பூசை, திருவூஞ்சல் என்பவற்றைத் தொடர்ந்து அம்பாள் வெளி வீதியுலா எழுந்தருளலுடன் நிறைவுறும். (8-33)

# கலட்டி வீரகத்திப் பிள்ளையாருக்கு நாளை கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம்-வண்வட கிழக்கு, கலட்டி வீரகத்திப் பிள்ளையார் ஆலய வருடாந்த மகோற்சவம் நாளை 13 ஆம் திகதி சனிக்கிழமை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.


எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை இரவு சப்பறத் திருவிழாவும் 21 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு தேர்த்திருவிழாவும் 22 ஆம் திகதி திங்கட் கிழமை காலை 10 மணிக்குத் தீர்த்தத் திருவிழாவும் அன்றைய தினம் மாலை கொடியிறக்கமும் நடைபெறும் என ஆலய பிரதம குரு சிவஸ்ரீ.து.விவேகானந்தக் குருக்கள் அறிவித்துள்ளார். (8)



மக்கள் வங்கியின் "தானியங்கி பணம் வழங்கும் இயந்திரம்" (ATM) நகர அபிவிருத்தி சபை வளாகத்தில் கடந்த 9 ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் D.B.S.K திசாநாயக்க பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார். -(8)

# புதையல் தோண்டிய அறுவர் கைது!



(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மலையாளபுரம் பகுதியில் புதையல் தோண்ட முற்பட்ட 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தனியாருக்குச் சொந்தமான காணியில் கலைப் பொருள் மற்றும் தொல் பொருட்களை தேடும் நோக்கில் அகழ்வாராய்ச்சியில் ஈடுபட்டபோது அனைவரும் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்களை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பொலிஸார் தெரிவித்துள்ளனர். (8)

# குறிகாட்டுவான் இறங்குதுறை வீதிக்கு காப்பெற் இடும் பணிகள் ஆரம்பம்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் குறிகாட்டுவான் இறங்குதுறை வீதிக்கு காப்பெற் இடும் பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

குறிகாட்டுவான் இறங்குதுறை வீதி அகலமாக்கும் பணிகள் நிறைவடைந்துள்ள நிலையில் தற்போது அந்த வீதிக்கு காப்பெற் இடும் பணிகள் நேற்று முன்தினம் புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டு முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதனால் குறிகாட்டுவான் இறங்குதுறை நோக்கி பயணிக்கும் வாகனங்கள் அனைத்தும் குறிகாட்டுவான் இறங்குதுறை நுழைவாயில் வரை மட்டுமே அனுமதிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் திங்கட்கிழமை நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்திர மகோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளமையால் பக்தர்களின் வருகையைக் கருத்திற்கொண்டு குறித்த வீதியின் புனரமைப்பு பணிகள் துரித கதியில் முன்னெடுக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (8-33)

# டவர் தமிழ் நாடகப் பாடசாலையின் உயர் டிப்ளோமா பட்டமளிப்புவிழா

(யாழ்ப்பாணம்)

டவர் நாடக அரங்கப் பாடசாலை மூலம் நடைபெற்று வருகின்ற தமிழ் மொழி மூலமான இரண்டு வருட முழுநேர நாடகமும் அரங்கக் கலைகளுக்குமான உயர் டிப்ளோமா பாடநெறியினை வெற்றிகரமாக முடித்த 2023/24 கல்வியாண்டின் 49 மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வானது நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கு கடற்றொழில், நீரியல் மற்றும் கடல் வளங்கள் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தலைமையில் யாழ்ப்பாணம் திருவள்ளுவர் பண்பாட்டு மத்திய நிலையத்தின் பிரதான மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில் வட மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் மற்றும் வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் டவர் நாடகப் பாடசாலை ஆலோசணைக்குழு உறுப்பினர்கள், நாடக பாடநெறி விரிவுரையாளர்கள், டிப்ளோமாதாரர்கள், பெற்றோர்கள் மற்றும் நாடகப் பாடசாலை மாணவர் குழு ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | noolaham.media

# அகில இலங்கை இளங்கோ கழகம்
# புலமை ஒலி - 2026
# சிலப்பதிகார விழா

இடம்
அல்லையம்பதி வடிவேலர் மணி மண்டபம்
துன்னாலை, கரவெட்டி.

காலம் - 12, 13 மற்றும் 14 ஜூன் 2026
(வெள்ளி, சனி, ஞாயிறு) மாலை 4.00 மணி

**இன்றைய நிகழ்வுகள்**
**12.06.2026 வெள்ளிக்கிழமை**
**மாலை 4.00 மணி**
**தமிழ்த்தாத்தா கந்தமுருகேசனார் அரங்கு**

**வரவேற்பு நடனம்**
சி.அபிசஞ்ஞா, கு.சதுஸ்னா, ர.சரணியா,
அ.தக்ஷிகா, கா.சாகித்யா, த.சர்மிகா
(நெறியாள்கை: திருமதி கௌஷிகா விஜேந்திரன்)

**மங்கல விளக்கேற்றல்**
திரு.திருமதி ஜெபநேசன் உமாதேவி தம்பதியினர் (தொழிலதிபர்)
திரு.திருமதி ரூபன் நிவிஷிகா தம்பதியினர்
(உரிமையாளர், வாணி நகை மாளிகை)

**கடவுள் வாழ்த்து**
பிரம்மஸ்ரீ பாலேந்திரா நிதூஷன சர்மா
(மாணவன் யாழ் பல்கலைக்கழகம்)

**கழகக்கீதம்**

**ஆசியுரை**
பிரம்மஸ்ரீ தியாக மயூரகிரிக்குருக்கள்
(மேனாள் ஆசிரியர், இந்து சாதனம்)

**வரவேற்புரை**
திரு.ம.பகீரதன்

**தலைமையுரை**
துணைவேந்தர், பேராசிரியர் தி. வேல்நம்பி
(துணைவேந்தர், யாழ் பல்கலைக்கழகம்)

**தொடக்கவுரை**
பேராசான் ச. மார்க்கண்டு (ஸ்தாபித அமைப்பாளர், தென்மராட்சி இலக்கிய அணி)

**கௌரவிப்புரை**
திரு. சி. இலம்போதரன்

**நன்றியுரை**
செல்வன் செ.சரண்

நிகழ்ச்சி தொகுப்பு
பரா.றமேஸ்

## சிந்தனை அரங்கு

**நடுவர் : சிலிலம்பிசை கோ. கோகிலரதன்**
**"இன்றைய இளைய தலைமுறையினரிடத்துப் பெரிதும் புகட்ட வேண்டியது"**

**மொழியின் சிறப்பே : சு.இமயராஜ்**
**தனிமனித ஒழுக்கமே: அ.யூ.செ.லெம்பேட்**
**பண்பாட்டின் மகத்துவமே: இ. பிரஹரன்**
**மண் பற்றே: க.அருண்பிரசாந்**
**எம் இன வரலாறே: ப.தயாளதாசன்**

## பட்டிமண்டபம்



**நடுவர் : கம்பவாரிதி இலங்கை ஜெயராஜ்**
**சிலப்பதிகாரம் எம் நெஞ்சில் நிலைத்திருக்கப் பெரிதும் காரணம்**

**கருத்துச்செறிவே: சமூகவியலாளர் இ. இராஜேஸ்கண்ணன், வே.ஞானசம்பந்தன்**
**கவித்துவமே : செந்தமிழ்ச் சொல்லருவி ச.லலீசன், ச. அன்ரனி**
**பாத்திரப் படைப்பே சொல்வித்தகர்: ந. விஜயசுந்தரம், சி. குமரேசன்**

**விருதுபெறும் சான்றோர்**

திருமதி வசந்தகுமாரி கதிரவேற்பிள்ளை அவர்களால் நிறுவப்பட்ட
கலைஞான கேசரி சு.பரஞ்சோதி ஞாபகார்த்த
புலமை ஒலி உயர் விருது பெறுபவர்
**பேராசிரியர். சி. சிவலிங்கராஜா**

விநாயகம் கிருஷ்ணகாந்தன் அவர்களால் நிறுவப்பட்ட
வீரகத்திப்பிள்ளை விநாயகம் ஞாபகார்த்த
கல்விப் பணிக்கான உயர்விருது பெறுபவர்
**பண்டிதர் கலாநிதி செ.திருநாவுக்கரசு**

வேலுப்பிள்ளை மனோகரன் அவர்களால் நிறுவப்பட்ட
இலக்கியப் பணிக்கான உயர்விருது பெறுபவர்
**திருக்குறள் கலாநிதி. ஆ. வடிவேலு**

விழா சிறப்புற வாழ்த்துவோர்:- கதிரவேற்பிள்ளை வசந்தகுமாரி குடும்பத்தினர் - இந்திரம்மன் கோவிலடி, துன்னாலை
ஜெயரூபன் அருணிஸ், ஜெயரூபன் ஆறிஸ்
தம்பசிட்டி.






அமெரிக்க வெளியுறவுத்துறை அரசில், இராணுவ மற்றும் ஆயுதங்களை அகற்றுதல் மற்றும் குறைத்தல் பணியகத்தின் திட்ட முகாமையாளர் நேற்றைய தினம் கிளிநொச்சி மாவட்டத்தில் அமெரிக்க அரசின் நிதியுதவியில் Dash மனிதாபிமான கண்ணிவெடியகற்றும் செயற்பாடுகளை பளை அரசர் கேணி பகுதியில் பார்வையிட்டார்.

தொடர்ந்து பளை மத்திய கல்லூரியில் வெடிபொருள் அபாயம் தொடர்பாக நடாத்தப்பட்ட விழிப்புணர்வு கருத்தரங்கிலும் பங்குகொண்டு பாடசாலைக்கு 30 கதிரைகளையும் வழங்கினார்.

(படங்கள்: தேவானந்தன்)

# டிஜிற்றல் அடையாள அட்டை மோசடி ஆட்பதிவுத் திணைக்களம் எச்சரிக்கை




(கொழும்பு)

டிஜிற்றல் அடையாள அட்டைகளைப் பதிவு செய்வதாக கூறி ஆட்பதிவுத் திணைக்களத்தின் பெயரைப் பயன்படுத்தி பொதுமக்களின் தனிப்பட்ட தகவல்களை பெற்று நிதி மோசடிகளில் ஈடுபடும் நபர்கள் குறித்து பொதுமக்கள் அவதானமாக இருக்குமாறு ஆட்பதிவுத் திணைக்களம் அறிக்கை மூலம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய, திணைக்களத்தின் உத்தியோகபூர்வ துரித அழைப்பிலக்கத்தை போன்ற தொலைபேசி இலக்கங்களிலிருந்து பொதுமக்களைத் தொடர்பு கொண்டு மின்னணு தேசிய அடையாள அட்டை அல்லது டிஜிற்றல் அடையாள அட்டைக்கான பதிவுகளை மேற்கொள்வதாக கூறி சிலர் ஏமாற்றி வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த மோசடிகளுக்காக தங்களை திணைக்கள அதிகாரிகள் எனப் போலியாக் காட்டிக் கொள்ளும் நபர்கள் +94 11 522 6126, 011 5226126, 077 116 7739 மற்றும் 0742756098 ஆகிய தொலைபேசி இலக்கங்களை பயன்படுத்தி வருதாக கண்டயறியப்பட்டுள்ளது.

அத்துடன் இந்த மோசடியின் பின்னணியில் உள்ளவர்கள் அரசாங்க இலட்சினையை பயன்படுத்தி ஒரு போலி கையடக்க தெலைபேசி செயலியை உருவாக்கியுள்ளதுடன் அதன் மூலம் டிஜிற்றல் அடையாள அட்டைப் பதிவுக்குத் தேவை என்று கூறி பொதுமக்களின் தனிப்பட்ட தகவல்களை கோரி வருகின்றனர்.

மேலும், ஆட்பதிவுத் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளத்தை போன்று வடிவமைக்கப்பட்ட போலி இணைத்தளத்தின் ஊடாகவும் தனிப்பட்ட தகவல்களை வழங்க வேண்டாம் என்று திணைக்களம் எச்சரித்துள்ளது.

தற்போது டிஜிற்றல் அடையாள அட்டை அல்லது மின்னணு தேசிய அடையாள அட்டைகளுக்கான எந்தவொரு பதிவு நடவடிக்கைகளும் திணைக்களத்தினால் முன்னெடுக்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அடையாளம் தெரியாத நபர்களிடமிருந்து வரும் அழைப்புகளுக்கோ அல்லது போலியான இணையத்தளங்களுக்கோ தங்களின் தனிப்பட்ட மற்றும் நிதி தகவல்களை வழங்க வேண்டாம் என்று ஆட்பதிவுத் திணைக்களம் பொது மக்களை கேட்டுக்கொண்டுள்ளது. (நி)

# போதைப்பொருள் ஒழிப்பு சுற்றிவளைப்பு ஒரே நாளில் 867 பேர் கைது

(கொழும்பு)

முழு நாடுமே ஒன்றாக என்ற நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டுள்ள தேசிய போதைப்பொருள் ஒழிப்புத் திட்டத்துக்கமைய நேற்று முன்தினம் மாத்திரம் 867 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

முழு நாடுமே ஒன்றாக - தேசிய செயற்பாடு என்ற தொனிப்பொருளின் கீழ் கடந்த ஒக்டோபர் மாதம் 30 ஆம் திகதியிலிருந்து நாடளாவிய ரீதியில் தேசிய போதைப்பொருள் ஒழிப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய நேற்று முன்தினம் புதன்கிழமை நாடு முழுவதும் சுமார் 866 சுற்றிவளைப்பு நடவடிக்கைகளை முன்னெடுத்திருந்த பொலிஸார், 867 சந்தேக நபர்களைக் கைது செய்துள்ளனர்.

மேலும் கைதானவர்களில் 7 சந்தேகநபர்களுக்கு எதிராக தடுப்புக்காவல் உத்தரவு பெறப்பட்டுள்ளதுடன், கைதான ஒரு சந்தேகநபருக்கு எதிராக சட்டவிரோத சொத்துகுவிப்பு தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மேலும் போதைப்பொருளுக்கு அடிமையானவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ள 2 நபர்கள் மறுவாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி)

# தரமற்ற பிளாஸ்ரிக் பாவனை நீண்டகால பாதிப்புக்களை ஏற்படுத்தும்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை



(கொழும்பு)

தரமற்ற பிளாஸ்ரிக் பாத்திரங்களை பயன்படுத்துவது நீண்டகால சுகாதாரப் பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என சுகாதார அமைச்சு எச்சரித்துள்ளது.

பாதுகாப்பற்ற பிளாஸ்ரிக் தயாரிப்புகளைத் தொடர்ந்து நீண்டகாலமாகப் பயன்படுத்துவதானது, பல்வேறு ஆரோக்கியக் குறைபாடுகள் மற்றும் சுகாதாரப் பாதிப்புகள் ஏற்படுவதற்கு வழிவகுக்கலாம் என சுகாதார அதிகாரிகள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

பாதுகாப்பான உணவு விநியோகம் மற்றும் கையாளுதல் பழக்கவழக்கங்களை ஊக்குவிப்பதற்கும், பிளாஸ்ரிக் பயன்பாட்டினால் ஏற்படும்' சுகாதார அபாயங்களைக் குறைப்பதற்கும் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளுக்கு மத்தியிலேயே சுகாதார அமைச்சு இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## நள்ளிரவில் தாக்கிய பாகிஸ்தான் தூக்கத்திலேயே 11 குழந்தைகள் உயிரிழப்பு

### ► ஆப்கானிஸ்தான் குற்றச்சாட்டு

(காபூல்)

ஆப்கானிஸ்தான் எல் லைப் பகுதிக்குள் பாகிஸ்தான் ராணு வப் போர் விமானங்கள் நள் ளிரவில் குண்டு வீசி நடத்திய தாக்குதலில் 11 குழைந்தைகள் உட்பட 13 பேர் உயிரிழந்தனர்.

தாலிபான்கள் தங்கள் நாட்டுக்குள் இயங்கி வரும் தெக்ரிக் தாலிபான் பாகிஸ் தான் பயங்கரவாத அமைப் புக்கு உதவுவதாகக் கூறி பாகிஸ்தான் அவ்வப்போது அந்நாட்டின் பகுதிகள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது. இதனால் இரு நாடுக ளுக்கு இடையில் மோதல் ஏற்பட்ட நிலையில் கட்டார் உள்ளிட்ட நாடுகள் முயற் சியில் கடந்த மாதம் தற்காலிகப் போர் நிறுத்தம் எட்டப்பட்டது. இந் நிலையில் போர் நிறுத் தத்தை மீறி பாகிஸ்தான் தாக்குதல் நடத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தான் தலிபான் அரசின் செய்தித் தொடர்பாளர் ஜபிஹுல்லா முஜாஹித் தனது எக்ஸ் பதிவில் "பாகிஸ்தான் வான்படை விமானங்கள் ஆப் கானிஸ்தானின் வான் எல் லையை அத்து மீறித் தாண்டி,



எல்லை யோர மாகா ணங் களான குனார், கோஸ்ட் மற் றும் பக்திகா ஆகிய பகுதிக ளில் உள்ள பொதுமக்கள் குடியி ருப்புகள் மீது நள்ளிரவில் குண்டுகளை வீசின. மக்கள் அனைவரும் வீடுகளில் தூங் கிக் கொண் டிருந்த நேரத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப் பட்டதால், அவர்களால் தப்பி ஓட முடியாமல் போனது. இந்த கோரத் தாக்குதலில் 11 குழந் தைகள், ஒரு பெண் மற் றும் முதியவர் ஒருவர் என மொத்தம் 13 பேர் சம்பவ இடத் திலேயே உடல் சிதறி உயிரி ழந்தனர். மேலும், 14 பெண் கள் மற்றும் குழந் தைகள் படுகாயம டைந்தனர் என தெரி வித்துள்ளார்.

இந்தத் தாக்குதலை ஒப்புக் கொண்டுள்ள பாகிஸ் தான் தகவல் தொடர்புத் துறை அமைச்சர் அதா வுல்லாதாரர், பொதுமக்க ளை கொன்றதாக கூறும் தலிபான் அரசின் குற்றச் சாட்டுகளை பொய்யான பிரச் சாரம் என்று சாடியுள்ளார்.

பாகிஸ்தானில் 6 எல்லைப் பாதுகாப்புப் படை வீரர்களைக் கொடூரமாகக் கொன்ற தெஹ்ரிக் தலி பான் பாகிஸ்தான் பயங்க ரவாத குழுவிற்கு பதிலடியா கவே இந்தத் தாக்குதல் நடத் தப்பட்டுள்ளது என தெரி வித்த அவர் இந்த தாக்கு தலில் 26 பயங்கரவாதிகள் கொல்லப்பட்ட தாக தெரிவித்துள்ளார். (நி)

## கொதிநிலையில் மத்திய கிழக்கு வான்பரப்பை மூடியது குவைத்

(குவைத்)

ஈரானின் தொடர் ஏவு கணை மற்றும் ஆளில்லா விமான தாக்குதல்களைத் தொடர்ந்து, குவைத் தனது வான் பரப்பை அவசரமாக மூடியுள்ளதுடன், அங்கு வர விருந்த அனைத்து விமானங் களையும் மாற்று விமான நிலையங்களுக் குத் திருப்பி விட்டுள்ளதாக சர்வதேச செய்தி நிறுவனம் நேற்று வியாழக்கிழமை தெரிவித் துள்ளது.

குவைத்தின் சிவில் விமா னப் போக்குவரத்து பொது இயக்குநரகம் நேற்று அதி காலை 4.50 மணி முதல் இந்த வான்பரப்பு மூடல் அமு லுக்கு வந்துள்ளதாக அறிவித் துள்ளது. வான்வழிப் போக்கு வரத்து மற்றும் பயணிகளின் பாது காப்பைக் கருத்திற் கொண்டு இந்த முன்னெச் சரிக்கை நடவடிக்கை எடுக் கப்பட்டுள்ளது.

இதற்கு முன்னதாக, குவைத் வான்பரப்பிற்குள் நுழைந்த பல "பகைமைப் பொருட்களை" தங்கள் நாட்டு வான் பாதுகாப்புப் படையினர் வெற்றிகரமாக இடைமறித்து அழித்துள்ளதாக குவைத் தின் உத்தியோகபூர்வ செய்தி நிறுவனமான "குவைத் செய்தி முகமை" செய்தி வெளியிட்டிருந்தது. இந்த அறிவிப்பு வெளியா வதற்கு முன்பாக, குவைத் சர்வதேச விமான நிலையத்திற்கு வர விருந்த பல விமானங்கள் வான் பரப்பில் நீண்ட நேரம் வட்டமடித்தபடி காத்திருந்த தாக நேரில் பார்த்தவர் கள் தெரிவித்துள்ளனர். அண் மைக்கால மோதல்களில் குவைத் சர்வதேச விமான நிலையம் நேரடியாக ஈரா னிய ஏவுகணைத் தாக்குத லுக்கு உள்ளாகி, ஒருவர் பலி யானதுடன் பலர் காயம டைந்திருந்தனர்.

வியாழக்கிழமை அதி காலை குவைத் மற்றும் பஹ் ரைனில் உள்ள அமெரிக்க இராணுவ விமானத் தளங் களை இலக்கு வைத்து தாங் கள் கடும் தாக்குதல்களை நடத்தி யதாக ஈரானின் இஸ் லாமிய புரட்சிகர காவற்படை உத்தியோகபூர்வமாக ஒப் புக் கொண்டுள்ளது.

குவைத்தில் உள்ள "அலி அல் சலேம்" மற்றும் "அஹ் மத் அல் ஜாபர்" ஆகிய இரு முக்கிய அமெரிக்க விமானப் பட்ட தளங்கள் உட்பட பிராந் தியத்தில் உள்ள 18 முக்கிய அமெ ரிக்க இரா ணுவ இலக் குகளை இருகட்டங்களாகத் தாக்கி யுள்ளதாக ஈரான் தெரி வித்துள்ளது. அண்மையில் தென் ஈரானில் அமெரிக்கப் படைகள் நடத்திய வான் வழித் தாக்குதல்களுக்குப் பழிவாங்கும் நடவடிக்கை இது என ஈரான் வர்ணித்துள் ளது.

அமெரிக்காவிற்கும் ஈரா னுக்கும் இடையிலான மோதல் தற்போது குவைத், பஹ்ரைன் போன்ற அண்டை நாடுகளுக்கும் பரவியுள்ளதால் மத்திய கிழக்கு பிராந்தியத்தில் முழு அளவிலான போர்ச்சூழல் உருவாகியுள்ளது. (நி)




## ஹார்முஸ் நீரிணை
## உலக நாடுக

டெஹ்ரான்

**அமெரிக்கா நடத்திய புதிய வழித் தாக்குதல்களுக்குப் யாக, ஹார்முஸ் நீரிணை துக் கப்பல்களுக்கும் மூட என்று ஈரானின் புரட்சிகரா காப்புப் படை அறிவித்துள்**

பிராந்தியத்தில் நிலவும் கடுமையான பாதுகாப்பற்ற சூழ்நிலையின் காரண மாக, உடனடியாக நட முறைக்கு வரும் வகை யில் எண்ணெய் டேங்கர்கள் மற்றும் வர்த் தகக் கப்பல்கள் உட்பட அனைத்துக் கப்பல்களுக் கும் ஹார்முஸ் நீரிணை மூடப்படுவதாக ஈரான் அறிவித்துள்ளது.

மேலும், இந்த உத்த ரவை மீறி நீரிணையை கடக்க முயற்சிக்கும் எந்த வொரு கப்பலும் இராணுவ வைத்துத் எச் சரிக்கை

தொடர போர்ச் சூழ முக்கிய நீர் பாதை கட ளாகவே ஏ

## உலக மக்களின் நன்மதிப்பை
## இஸ்ரேல் பிர

(ஜெருசலேம்)

140 கோடிக்கும் அதிக மான மக்களைக் கொண்ட நாட்டை, உல கின் மிக வேகமாக வளர்ந்து வரும் பொரு ளாதாரங்களில் ஒன் றாக மாற்றியவர் பிரதமர் மோடி என்று இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகு தெரி வித்துள்ளார்.

அவர் வெளியிட்ட வீடி யோவில் அவர் கூறியதா வது: இந்தியாவின் மிக நீண்ட காலம் பதவி வகித்த தேர்ந் தெடுக்கப்பட்ட பிரதமர் என்ற பெருமையைப் பெற்ற எனது நண்பர் மோடிக்கு வாழ்த்துக்கள். இந்தியா மற்றும் இஸ்



ரேல் இடையேயான உறவை நீங்கள் வலுப்படுத்தியுள்ளீர்கள். மேலும் உலகம் முழுவதும் உள்ள கோடிக்கணக்கான மக்க ளின் இரு தலை கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வெளிநாடு

# ணையை மூடியது ஈரான்

# களுக்குப் பேரிடி!

ப புதிய வான்
க்குப் பதிலடி
ணை அனைத்
ம் மூடப்படும்
டசிகரப் பாது
த்துள்ளது.



இராணுவ ரீதியாகக் குறி வைத்துத் தாக்கப்படும் என்றும் எச் சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ந்து நீடித்து வரும் போர்ச் சூழல் காரணமாக இந்த முக்கிய நீர்வழிப் போக்குவரத்து பாதை கடந்த சில மாதங்க ளாகவே ஏற்கனவே முடங்கியி ருந்தது.

போருக்கு முந்தைய சாதாரண கால அளவோடு ஒப்பிடுகையில் தற்பொழுது இந்த நீரிணை வழி யாகச் செல்லும் கப்பல் போக்குவரத்து வெறும் 15 வீத மாக மட்டுமே குறைந்திருந்தது. மோதல் தொடங்கியது முதலே, தங்கள் அனுமதியின்றி கடந்து செல்லும் கப்பல்க ளைத் தாக்குவோம் என ஈரான் அச்சுறுத்தி வந்த நிலையில், தற்பொழுது இந்த முழுமையாக முடக் கும் அறிவிப்பு வெளியா கியுள்ளது. (நி)

# திப்பைக் கொண்டவர் பிரதமர் மோடி

# பிரதமர் புகழாரம்



றாக மாற்றியுள்ளது.

25 கோடி இந்தியர்கள் வறுமையிலிருந்து மீள வும் நடவடிக்கை எடுத்து ள்ளீர்ள். முன்னெப் போதும் இல்லாத அள வுக்கு நமது நட்பும், இருநா டுகளுக்கும் இடையே யான உறவும் சென்று ள்ளது. விரைவில் உங் களை மீண்டும் சந்திக்க வும், வரும் ஆண்டுகளில் உங்க ளுடன் தொடர்ந்து இணைந்து பணி யாற்றவும் நான் ஆவலு டன் காத்திருக்கிறேன். உங்களுக்கும், உங்க ளின் தலைமையின் கீழ் செயற்படும் இந்தியாவிற்கு ம் எனது நல் வாழ்த் துகள், இவ்வாறு அவர் தெரிவித் தார். (நி)

ைவ
ர்கள்.
வதும்
மக்க

ளின் நன்மதிப்பைப் பெற்று இருக்கிறீர்கள். உங்களது தலைமைத்துவம் 140 கோடிக் கும் அதிகமான மக்களைக் கொண்ட ஒரு நாட்டை, உலகின் மிக வேகமாக வளர்ந்து வரும் பொருளாதாரங்களில் ஒன்

## சுவீடன் பாடசாலைகளில் செல்போனுக்குத் தடை





(ஸ்டாக்ஹோம்)


சுவீடன் அரசு தனது நாடு முழுவதும் உள்ள பாடசாலைகளில் மொபைல் போன்களுக்கு முற்றிலும் தடை விதித்துள்ளதாக அதிகாரப் பூர்வமாக அறி வித்துள்ளது. முன்னர் டிஜிற் றல் கல்வி முறையில் உலக ளவில் முன்னணியில் இருந்த சுவீடன், தற்போது மாணவர்களின் கவனச் சிதறலைக் குறைக்கவும், கற்றல் திறனை மேம்படு த்தவும் இந்த அதிரடி முடிவை எடுத்துள்ளது.

இத்தடை நடப்பு கல்வி ஆண்டின் தொடக்கத்தி லிருந்து நாடு முழுவதும் உள்ள அனைத்துப் பாட சாலைகளிலும் கட்டா யமாக் கப்பட உள்ளது. 7 முதல் 16 வயது வரையிலான அனைத்து ஆரம்ப மற்றும் கீழ்-நிலை இடை நிலைப் பள்ளி மாணவர்களுக் கும் இத்தடை பொருந் தும்.

ஐரோப்பாவின் பிற நாடுக ளான பிரான்ஸ், நெதர் லாந்து மற்றும் டென்மார்க் போன்ற நாடுகளைத் தொடர்ந்து தற்போது சுவீட னும் 16 வயதுக்குட்பட்ட மாணவர்கள் பாடசாலைக ளில் மொபைல் போன்கள் பயன்படுத்த தடை விதித்துள்ளது. (நி)

## ஈரான்- அமெரிக்கப் படைகள் கடலில் தீவிர மோதல்





(டெஹ்ரான்)

எண்ணெய் தாங்கிகள் மற்றும் வர்த்தகக் கப்பல்கள் உட்பட அனைத்து வகை யான கப்பல்களுக்கும் ஹார் முஸ் நீரிணையை மூடு வதற்கு ஈரானின் உச்ச கூட்டு இராணுவக் கட்ட ளையகம் உத்தரவிட்டுள் ளதாக ஈரானின் "மெஹ்ர்" செய்திச் சேவை தெரிவித் துள்ளது.

இந்த எல்லையைக் கடக்க முயலும் எந்தவொரு கலனும் உத்தியோக பூர்வமாக இலக்கு வைக்கப் படும் என்றும் ஈரானிய இராணுவம் எச்சரித்துள் ளது. அதேநேரம்,ஹார் முஸ் நீரிணையில் அமெரிக் கப் படைகளுக்கும், ஈரா னின் இஸ்லாமிய புரட்சிகர காவற்படையின் கடற்படைப் பிரிவுகளுக்கும் இடையே தீவிர மோதல்களும் இரு தரப்புத் துப்பாக்கிப் பிர யோகங்களும் இடம் பெற் றுள்ளதாக மெஹ்ர் செய்திச் சேவை மேலும் குறிப்பிட் டுள்ளது.

அமெரிக்கப் படைகள் ஈரானின் 7 கடலோரப் புள் ளிகளை இலக்கு வைத்து இதுவரை தாக்குதல்களை நடத்தியுள்ளன.

வளைகுடா வான்பரப்பை மீறி நுழைந்த அமெரிக் காவின் எஃப்-16 (F16) போர் விமானத்தை நோக்கி ஈரா னின் வான் பாதுகாப்பு அமைப்புகள் ஏவுகணைத் தாக்குதலை நடத்திய தாகவும், இதனால் அந்தப் போர் விமானம் பின்வாங்க நிர்பந்திக்கப்பட்டதாகவும் இஸ்லாமிய புரட்சிகர காவற் படை உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# இரசாயன உரப்பாவனையே புற்று நோய் அதிகரிக்கக் காரணம்

## வைத்திய நிபுணர் கலாநிதி ஜெயக்குமாரன்

(அராலி)

இலங்கையில் புற்றுநோயாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கின்ற நிலையில் அவர்களுக்கான சிகிச்சை வளங்களில் நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என புற்றுநோய் வைத்திய நிபுணரும் தேசிய புற்றுநோயியல் நிறுவன ஆலோசகருமான வைத்திய கலாநிதி நடராஜா ஜெயக்குமாரன் தெரிவித்தார்.

நேற்று முன்தினம் புதன்கிழமை யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் மறைந்த மருத்துவ இயற்பியல் பேராசிரியர் நாகலிங்கம் சுந்தரலிங்கம் ஞாபகார்த்த நிகழ்வில் பேருரை ஆற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், புற்று நோய் இலங்கையில் மட்டுமல்ல உலகத்தில் உள்ள பல நாடுகளில் தாக்கம் அதிகரித்துள்ள தன்மையை கொண்டுள்ளது. இந்தப் புற்றுநோய் உருவாவதற்கு பல்வேறு காரணங்கள் காணப்படுகின்ற நிலையில் பொதுவாக உணவுப் பழக் கங்கள் இந்த நோய்க்கு ஆரம்ப கர்த்தாவாக அமைகிறது.

உலகமயமாக்கலின் விளைவாக இரசாயன உரங்கள் கிருமிநாசினிகள் உணவு பொருட்களுக்கு அதிகம் பயன்படுத்தப்படுகின்றமையால் புற்றுநோயின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது. உடற்பயிற்சி மற்றும் பாதுகாப்பான உணவுப் பழக்கவழக்கங்களை கடைப்பிடிப்பதன் மூலம் இந்த நோய் வராமல் பாதுகாத்துக் கொள்ள முடியும்.

இலங்கையைப் பொறுத்தவரையில் புற்றுநோய்க்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்ற நிலையில் சுகாதார அமைச்சு நோயாளர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான ஏற்பாடுகளையும் வழங்கியிருக்கிறது. இலங்கையில் புற்றுநோயாளர் ஒருவர் தனது சிகிச்சையை விரும்பிய இடத்தில் பெறுவதற்கான உத்தரவாதங்கள் வழங்கப்பட்டுள்ள நிலையில் விரும்பிய இடங்களில் சிகிச்சைகளை பெற முடியும்.

ஆகவே புற்று நோயையை வராமல் தடுப்பதற்கு சுகாதார வழிகாட்டல்கள் மற்றும் வாழ்க்கை முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வந்தால் தடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (8-104)

# கல்யாணமாலை

## சர்வதேச இலவச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1980- இந்து
நட்சத்திரம்: உத்தராடம்
1இல் செவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: A/L,Shop(Own)
எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர்
தொ.இ: B/16956

பிறப்பு:1995-RC
உயரம் :6'1"
தகைமை/தொழில்- Degree, Unior Executive Officer
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16958

பிறப்பு:1995-இந்து
நட்சத்திரம்: சதயம்
கி-பா: 24 3/4
உயரம்: 5'2"
தகைமை/தொழில்:A/L,France
எதிர்பார்ப்பு: தகுதியான பெண்
தொ.இ: B/16960

பிறப்பு: 1991- இந்து
நட்சத்திரம்: உத்தரட்டாதி
8 இல் செவ்
கி-பா: 66 1/2
உயரம்: 5'5"
தகைமை/தொழில்-HNDE, TO
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: B/16966

பிறப்பு: 1994- இந்து
நட்சத்திரம்: பூசம்
2இல் செவ்
கி-பா: 39 1/2
உயரம்: 5'8"
தகைமை/தொழில்: BSC,Canada
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: B/16967

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு-1997-இந்து
நட்சத்திரம்: ஆயிலியம்
உயரம்: 5'5"
தகைமை/தொழில்: BA,மொழிபெயர்ப்பாளர்
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16972

பிறப்பு-1998-RC
நட்சத்திரம்: அச்சுவினி
உயரம் : 5'7"
தகைமை/தொழில்:BA,Coordinate OFFICER
எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்
தொ.இ: G/16973

பிறப்பு-1990-இந்து
நட்சத்திரம்: அச்சுவினி
கி-பா:4
உயரம்: 5'6"
தகைமை/தொழில்: BSC,Engineer
எதிர்பார்ப்பு: பட்டதாரி
தொ.இ: G/16975

பிறப்பு-1995-இந்து
நட்சத்திரம்:மகம்
கி-பா : 36
உயரம்: 5'3"
தகைமை/தொழில்-MBA, Teacher
எதிர்பார்ப்பு: உத்தியோகம்
தொ.இ: G/16977

பிறப்பு-1996 - இந்து
நட்சத்திரம்-உத்தரட்டாதி
1இல்சூரிசெவ்
உயரம்: 5'2"
தகைமை/தொழில்: College, BEd, Teacher
எதிர்பார்ப்பு - அரச உத்தியோகம்
தொ.இ: G/16978

இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 076 097 3120
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 4.45 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

# இன்று ஒரு தகவல் 599



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## கைமாறும் கருத்துக்கள்!

ஒரு ஊரிலே ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜாவிற்கு ஒரு மந்திரி. ராஜா மிகவும் நியாயமானவர், நேர்மையானவர்,கண்டிப்பானவர்.

தப்பு செய்வது யாராக இருந்தாலும் தண்டனை கொடுப்பார். வேண்டியவர்களுக்கு ஒரு நியாயம், வேண்டாதவர்களுக்கு ஒரு நியாயம் என்பதெல்லாம் அவரிடம் கிடையாது.

ஒரு சமயம் அரசவையிலே அந்த அமைச்சரே விதிமுறைகளுக்குப் புறம்பாக நடந்துவிட்டர். மன்னருக்குக் கோபம் வந்துவிட்டது. உடனே அந்த அமைச்சரை அருகிலே கூப்பிட்டு கன்னத்திலே ஓங்கி அறைந்து விட்டார்.

உடனே அந்த அமைச்சர் என்ன செய்தார் தெரியுமா? நேராகச் சென்று அங்கே நின்று கொண்டிருந்த இன்னொருத்தர் கன்னத்திலே ஓங்கி அறைந்தார்.

அறை வாங்கியவர் திகைத்துப் போய்விட்டார். இவர் ஏன் நம்மளை வந்து அறைந்தார் என்று யோசித்தார். மன்னரும் திகைத்துப் போனார்.

நாம் இவரை அறைந்தால் அதுக்காக இவர் போய் இன்னொருத்தரை அறைய வேண்டுமா? இவருக்கென்ன பைத்தியமா என்று யோசிக்க ஆரம்பித்துவிட்டார்.

அமைச்சரைக் கவனித்தார். அவர் இன்னொருத்தரை அறைந்தார் அல்லவா, அந்த அறை வாங்கிய ஆளைப் பாரத்துக் கத்திக் கொண்டு இருந்தார்.

"ஏனப்பா... என்னிடம் அறை வாங்கி விட்டு இப்படி விபரமில்லாமல் நின்று கொண்டிருக்கிறாய்.

நான் உனக்குக் கொடுத்ததை நீ வேறு யாரிடமாவது கொடுத்துவிடு!" என்றார்.

உடனே அந்த ஆள் பார்த்தான். தனக்கு அடுத்தபடியா நின்று கொண்டிருந்தவனை ஓங்கி அறைந்தான். அவன் கன்னத்தைத் தடவிக்கொண்டே யோசித்தான். ஏதோ புரிந்து கொண்ட மாதிரி அருகில் நின்று கொண்டிருந்தவனை அறைந்தான்.

இப்படி... அந்த அறை மாறி மாறி போய்க் கொண்டே இருந்தது.ஊர் முழுவதும் பிரயாணம் செய்ய ஆரம்பித்தது.

அன்றைக்கு இரவு அந்த ராஜா தூங்குவதற்காக போனார். அந்த நேரம் அவர் கன்னத்திலே பளார் என்று ஒரு அறை விழுந்தது...! நம்மளை அறைந்தது யாரு என்று அதிர்ச்சியோடு மன்னர் திரும்பிப் பார்த்தார். அறைந்தது அவரது மனைவி!

"என்ன நடந்தது உனக்கு?" என்றார்.

"உங்களுக்குத் தெரியாதா... ஊர் முழுவதும் ஒருத்தர் மாத்தி ஒருத்தர் மூலமா இந்த அறை பிரயாணம் செய்து கொண்டு வருகிறது என்றார் அந்த அம்மா.

"அப்படி என்றால் ஆரம்பித்த இடத்துக்கே வந்து விட்டதா?" என்றார் மன்னர். "என்ன சொல்றீங்க?" என்றார். இவர் விவரம் சொன்னார். "அப்படி என்றால் நீங்கள் ஆரம்பித்து வைத்த இந்த விளையாட்டை நான் முடித்து வைத்துவிட்டேன்" என்றார்.

மறுநாள் காலை மறுபடியும் அரசவை கூடியது. அந்த அமைச்சர் மன்னரைப் பார்த்துக் கேட்டார். "என்ன மகாராஜா! என்னிடம் கொடுத்ததைத் திரும்ப வாங்கி விட்டீர்களா என்றார்.

"இப்படி நடக்கும என்று நான் எதிர்பார்க்கவே இல்லை!" என்றார் மன்னர்.

"ஆனால் நான் எதிர்பார்த்தேன். அது எங்கே போய்விடப் போகிறது.. ஊர் முழுவதும் சுத்தி கடைசியிலே உங்களிடம் தான் வந்து சேரும் என்று எனக்குத் தெரியும்!" என்றார் அமைச்சர்.

இந்தக் கதை வேடிக்கையாக இருந்தாலும் இதிலே உள்ள கருத்து முக்கியமானது.

இந்த உலகத்திலே பல கருத்துக்கள் இப்படித்தான் கைமாறி சுத்தி சுத்தி வந்து கொண்டிருக்கிறது. நம்ம ஆள் ஒருத்தன். தன்னுடைய நண்பன் ஒருத்தனை கடைத்தெருவிலே பார்த்தான். உடனே ஓடிப்போய் பளார் என்று ஒரு அறை கொடுத்தான். அவன் கன்னத்தைத் தடவிக் கொண்டே "ஏன்டா என்னை அறைந்தாய்?" என்று கேட்டான்."நீ ஏன்டா என்னை ஒரு முட்டாள் என்று என் மனைவியிடம் போய் சொன்னாய் என்றான் அவன்.

"உன்னை ஒரு முட்டாள் என்று சொன்னதுக்காகவா நீ என்னை அறைந்தாய் என்று கேட்டான் இவன். அதற்காக அறையவில்லை. அந்த ரகசியத்தை நீ ஏன் எங்களது வீட்டிலே போய்ச் சொன்னாய் அதற்காகத் தான் அறைந்தேன் என்றான் அவன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பயங்கரவாதம் இல்லாத நாட்டில் எதற்கு பயங்கரவாத தடைச்சட்டம்?

## மன்னாரில் போராட்டம்

(மன்னார்)

**பயங்கரவாத தடைச் சட்டத்திற்கு எதிராகவும், கைது செய்யப்பட்டுள்ள சொல்லிசை பாடகர் சங்கீத்தனை விடுதலை செய்யக் கோரியும் இலங்கை தமிழரசுக் கட்சியின் மன்னார் கிளை ஏற்பாடு செய்த போராட்டம் நேற்றுக்காலை மன்னார் அரச பேருந்து தரிப்பிடத்திற்கு முன்பு நடைபெற்றது.**



குறித்த போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து பொது அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், மன்னார் பிரஜைகள் குழு, மன்னார் மாவட்ட காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் சங்கத்தினர், அரசியல் பிரதிநிதிகள், பெண்கள் அமைப்புக்கள் உள்ளடங்கலாக நூற்றுக்கணக்கானவர்கள் கலந்து கொண்டனர்.

பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட இளைஞனுக்கு நீதி வேண்டியும்" பயங்கரவாத தடைச் சட்டத்தை இந்த நாட்டிலே இல்லாது செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை முன் வைத்தும் குறித்த போராட்டம் பதாதைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் முன்னெடுக்கப்பட்டது.

குறிப்பாக இந்த நாட்டில் அமுலில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டம் ரத்து செய்யப்பட வேண்டும், கைது செய்யப்பட்ட பாடகர் சங்கீத்தன் உட்பட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு நீண்ட காலமாக சிறையில் உள்ள அனைவரும் விடுதலை செய்யப்பட வேண்டும். இதற்கு ஜனாதிபதி துரித நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கோரிக்கை விடுத்தனர். (8-285)



# சந்தைகளில் நேற்றைய விலை

பொருளாதார சந்தை விலைகள்

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி | மட்டுவில் | வவுனியா |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 200 | 450 | 400 | 300 | 280 |
| உருளைக்கிழங்கு | 200 | 210 | 180 | 200 | -- | 330 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 400 | 600 | 450 | 400 |
| தக்காளி | 800 | 650 | 800 | 700 | 500 | 600 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 200 | 200 | 200 | 140 |
| கோவா | 300 | 300 | 350 | 250 | 250 | 180 |
| கரட் | 400 | 460 | 500 | 450 | 450 | 380 |
| பூசணி | 120 | 120 | 120 | 160 | 80 | 100 |
| புடோல் | 200 | 200 | 200 | 300 | 200 | 300 |
| வாழைக்காய் | 120 | 80 | 100 | 150 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 350 | 300 | 400 | -- | 330 |
| பெரிய வெங்காயம் | 220 | 240 | 250 | 220 | -- | -- |
| பாகற்காய் | 1300 | 2000 | 2000 | 1600 | 800 | 900 |
| வெண்டக்காய் | 200 | 150 | 300 | 300 | 200 | 250 |
| கருணைக் கிழங்கு | 350 | 320 | 200 | 400 | -- | 400 |
| பயற்றங்காய் | 300 | 200 | 300 | 200 | 250 | 250 |
| லீக்ஸ் | 450 | 460 | 500 | 350 | -- | 320 |
| பீற்றூட் | 350 | 500 | 500 | 600 | 400 | 450 |
| கறிமிளகாய் | 600 | 600 | 500 | 500 | 400 | 400 |
| முருங்கைக்காய் | 800 | 700 | 450 | 600 | 500 | 600 |
| போஞ்சி | 650 | 600 | 600 | 500 | 600 | 500 |
| கத்தரிதம்புள்ள | 300 | 150 | 300 | 300 | -- | -- |
| கீரை – 1 பிடி | 120 | 80 | 150 | 100 | -- | 100 |
| தேசிக்காய் | 500 | 450 | 400 | 500 | 400 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 120 | 80 | 100-140 | -- | 90 |
| இராசவள்ளி | 350 | 450 | 350 | 300 | -- | 300 |
| வெங்காயப்பூ | 600 | 500 | 800 | 400 | -- | -- |
| முள்ளங்கி | 200 | 300 | 200 | 250 | 250 | 200 |
| பொன்னாங்காணி | 100 | 100 | 200 | 60 | -- | 50 |
| வல்லாரை | 100 | 70 | 80 | 100 | -- | 50 |
| ஈரப்பலா | -- | -- | 100 | 250 | -- | -- |

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு பெரியபுலம் சனசமூக நிலையத்தின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 16 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3 மணியளவில் தலைவர் க.தேவதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளது. (8)

# இராசிபலன்

12.06.2026
வைகாசி 29, வெள்ளிக்கிழமை
துவாதசி பிற்பகல் 4.30 மணிவரை

பரணி பின்னிரவு 1.56 மணிவரை
சுப நேரம் 5.52-7.22 மணிவரை
இராகுகாலம் 10.22-11.52மணிவரை
பிரதோச விரதம்

சந்திராஷ்டமம்:அத்தம், சித்திரை

வள்ளவன்

**மேஷம்**
திட்டமிட்ட காரியங்களில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், குடும்பத்தினர் உங்களின் முயற்சிகளுக்கு பக்கபலமாக இருப்பர், சிலர் மீது காரணமில்லாமல் கோபம் ஏற்படலாம்.

**கடகம்**
கண்ணியம் மிக்க ஒருவரின் சந்திப்பு இடம்பெறலாம், பயணங்களால் பலனுண்டு, ஒளிமயமான வாழ்வுக்கு உறுதுணை புரியும் நாள், வருமானம் திருப்தி தரும்.

**துலாம்**
பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள்.

**மகரம்**
வரவேண்டிய பணவரவுகள் வந்து சேரலாம், இயல்பான வாழ்க்கையில் இன்பங்கள் கூடும், பெற்றோர் நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**ரிஷபம்**
பொறுப்பாக வேலைகளைச் செய்தாலும் ஏதாவது பழிச் சொல்லுக்கு ஆட்பட நேரிடலாம், பொறுமையால் பெருமை காண வேண்டிய நாள், சுபவிரயங்கள் கூடும்.

**சிம்மம்**
மறைமுகப் போட்டிகள் மாறும், மறதியால் விட்டுப் போன காரியங்களை இன்று செய்து முடிப்பீர்கள், வியாபார விருத்தியுண்டு, பயணங்களால் பலனுண்டு.

**விருச்சிகம்**
பாதியில் நின்ற பணியை மீதியும் தொடர்வீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும் ஆரோக்கியத்தில் முன்னேற்றமுண்டு, கௌரவமான நாள்.

**கும்பம்**
தன்னம்பிக்கை துளிர் விடும் நாள், பணியில் சிறு மன உழைச்சல் ஏற்படலாம், வழிபாட்டால் குதூகலம் காண வேண்டிய நாள், வருமானம் திருப்தி தரும்.

**மிதுனம்**
வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், காலை நேரத்திலேயே கலகலப்பான செய்திகள் வந்து சேரலாம், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும் நாள்.

**கன்னி**
மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், ஒரு வகையில் வந்த வரவுகள் மற்றொரு வகையில் விரயமாகலாம், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம்.

**தனுசு**
மனதில் உற்சாகமும் மகிழ்ச்சியும் அதிகரிக்கும், உறவினர் வழியில் அன்புத் தொல்லைகள் ஏற்படலாம், கொடுத்த வாக்கை காப்பாற்றி மகிழ்வீர்கள்.

**மீனம்**
குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், பொது வாழ்வில் மதிப்பும் மரியாதையும் உயரும், வழிபாட்டில் ஆர்வம் கூடும், பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**நாம் உண்மையை அறிந்திருந்தால் சிந்திக்க வேண்டிய அவசியமில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 5

காவியத் தொடர்

1063





ஆனால் முடியுமா? இலட்சக் கணக்கானவர்கள் சூழ்ந்திருந்தாலும், யமனைத் தடுத்து நிறுத்த முடியுமா? சொல்லும், ஜோதிடரே, சொல்லும்! நீர் ஜோதிடம் சொல்லா விட்டாலும் நான் சொல்லுகிறேன். சக்கரவர்த்திக்கும், அவருடைய குமாரர்கள் இருவருக்கும் இன்றைக்குப் பெரிய கண்டம் காத்திருக்கிறது.

யமதர்மன் அவர்களை நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருக்கிறான். சக்கரவர்த்தியின் யமன் பழுவூர் மாளிகையைச் சேர்ந்த பொக்கிஷ நிலவறையில் மறைந்திருக்கிறான். அருள் மொழியின் யமன் யானைப் பாகனுடைய அங்குசத்திலே ஒளிந்திருக்கிறான். அவர்கள் இருவரையும் தடுத்து நிறுத்திச் சக்கரவர்த்தியையும் பொன்னியின் செல்வனையும் காப்பாற்றுவது உம்முடைய பொறுப்பு. என் முத்திரை மோதிரத்தை எடுத்துக்கொண்டு உம் சீடன் தஞ்சைக்குப் போகட்டும். நீர் திருவாரூர் சென்று இளவரசருக்கு எச்சரிக்க வேண்டும், செய்வீரா? உடனே புறப்படுவீரா?"

ஜோதிடர் தத்தளித்துப் போனார். பழுவேட்டரையருக்கு சித்தப் பிரமை பிடித்து விட்டதா என்ற சந்தேகம் அவன் மனதில் தோன்றியது. ஆனால் அப்படியும் நிச்சயமாகச் சொல்லுவதற்கில்லை. கூறுவதெல்லாம் அறிவுக்குப் பொருத்தமாகவே இருக்கிறது.

ஆத்திரத்துடனும் பரபரப்புடனும் பேசினாலும், உண்மையைச் சொல்லுகிறவராகவே தோன்றுகிறது. இந்தப் பேச்சையெல்லாம் இளைய பிராட்டியும் கேட்டுக் கொண்டிருப்பார். அவளுடைய கருத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும். எப்படியாவது இந்தக் கிழவரை இங்கிருந்து உடனே அனுப்பி விட வேண்டும்.

"துர்க்கா பரமேசுவரியின் அருளினால் தங்களுடைய கட்டளையை என்னால் இயன்ற வரை நிறைவேற்றி வைப்பேன்?"

இப்படி ஜோதிடர் கூறிய போது உள்ளேயிருந்து பெண்கள் அணியும் பாதச் சிலம்பின் ஒலி கேட்டது.

"ஆகா! துர்க்கா பரமேசுவரி பாதச் சதங்கையை ஒலித்து அருள் புரிகிறாள். இனி, நான் கடம்பூருக்குத் திரும்பலாம், இதோ புறப்படுகிறேன்." "தனாதிபதி! பசியாயிருக்கிறது என் நீர்களே? இந்த எளியவன் வீட்டில் அமுது செய்து விட்டு"

"வேண்டாம், வேண்டாம்! என் பசி, தாகம் எல்லாம் பறந்து போய்விட்டன. நானும் கடம்பூருக்குப் பறந்து போகவேண்டும். ஆலயத்துக்கு அருகில் ரதம் ஒன்று நிற்கிறதே. அது யாருடையது, ஜோதிடரே? அதை நான் எடுத்துச் செல்லப் போகிறேன். கொள்ளிடக்கரை சென்றதும் திருப்பி அனுப்பி விடுகிறேன். ஓடத்தை மட்டும் எடுத்துக் கொண்டு." "ஐயா! அந்த ரதம் அந்த ரதம் என் பேரில் கருணை கூர்ந்து அதை எடுத்துப் போக வேண் டாம்"

"ஜோதிடரே! நீர் வீணாகக் கவலைப்படாதீர். சோழ நாட்டின் பட்டத்து இளவரசருடைய உயிரைக் காப்பாற்றுவதற்காக நான் அந்த ரதத்தை எடுத்துப் போகிறேன். துர்க்கா தேவியே அதற்குச் சம்மதம் தருவாள். மறுபடியும் பாதச் சிலம்பை ஒலிக்கச் செய்து தேவி அருள் புரிந்தால், சம்மதம் கிடைத்ததாக அறிந்து கொள்வேன் அதோ, கேளும்."

இவ்விதம் பெரிய பழுவேட்டரையர் கூறிக் கொண்டிருக்கையில், இளைய பிராட்டி குந்தவை பக்கத்து அறையின் கதவைத் திறந்து கொண்டு இலேசாகப் பாதச் சிலம்பு ஒலிக்க நடந்து வந்தாள்.

(தொடரும்)

# சிறுவர் அரங்கம்



## பள்ளிக்குச் சென்ற சிட்டுக்குருவிகள்



(நேற்றைய தொடர்ச்சி)

"அம்மா, தின்ன என்னம்மா கொண்டு வந்தாய்?" என்று ஆவலாகக் கேட்டன.

"இப்பொழுது, தீனி ஒன்றும் கொண்டு வரவில்லை. ஆனால் உங்களுக்குச் சீனி போல் இனிப்பான செய்தி ஒன்று கொண்டு வந்திருக்கிறேன்" என்று அம்மாச் சிட்டு கூறியது.

"என்ன! என்ன?" என்று இரண்டு சிட்டுகளும் குதித்துக் கொண்டு கேட்டன.

"உங்களை நாளைக்குப் பள்ளிக் கூடத்தில் சேர்த்து விடப் போகிறேன். தலைமை ஆசிரியை உங்களைச் சேர்த்துக் கொள்ள ஒப்புக் கொண்டு விட்டார்கள்" என்று அம்மா கூறியது.

இந்தச் செய்தியைக் கேட்டதும், இரண்டு சிட்டுக்களும் குதித்துக் குதித்துப் பறந்தன.

"நாங்கள் படிக்கப் போகிறோம்!" என்று கத்திக் கொண்டே அரசமரத்தைச் சுற்றிச் சுற்றி வந்தன. அந்த மரத்தில் குடியிருந்த பறவைகளுக்கெல்லாம் இது புதிய செய்தியாய் இருந்தது.

படித்தால் பெரிய நிலைக்கு வரலாம். இன்பமாக வாழலாம். அறிஞர்கள் பாராட்டுவார்கள். இப்படிப் பட்ட வாய்ப்பு அந்தச் சிட்டுக் குஞ்சுகளுக்குக் கிடைத்ததை எண்ணி அரசமரத்துப் பறவைகளெல்லாம் வாழ்த்துக் கூறின.

அம்மாச்சிட்டு, கவுடியா மடத்தின் எதிரில் இருந்த ஒரு தையற் கடைக்குப் பறந்து சென்றது.

தையல் பொறியின் மேல் போய் உட்கார்ந்து கொண்டு அந்தத் தையற்கலைஞரைப் பார்த்து, "அண்ணே! அண்ணே! தையற்கார அண்ணே, என் சிட்டுக் குஞ்சுகள் இரண்டும் நாளைக்குப் பள்ளிக் கூடத்திற்குப் போகின்றன. இரண்டு குஞ்சுகளுக்கும், இரண்டு சீருடைகள் தைத்துக் கொடுங் கள் அண்ணே" என்று கேட் டது.

தையற்காரரும் அதற்கு உடனே இரண்டு சீருடைகள் தைத்துக் கொடுத்தார்.

மறுநாள் காலை இரண்டு சிட்டுக் குருவிகளும் அழகான அந்தச் சீருடைகளை அணிந்து கொண்டு பள்ளிக் கூடத்துக்குப் புறப்பட்டன.

தொடரும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலிமையும் வீரமும் மிக்கவர்களின் ஆயுதம் அகிம்சை. - *மகாத்மா காந்தி*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# ஈழத் தமிழர்களுக்காக குரல் கொடுத்தவர் பாரதிராஜா

தமிழ்த் திரைப்பட உலகில் இயக்குநர் இமயமாக விளங்கிய பாரதிராஜா 10.06.2026 அன்று காலமானார் என்ற செய்தி அறிந்து ஈழத்தமிழ் மக்கள் சொல்லொணாத் துயரடைகின்றனர்.

தமிழகத் திரைப்படங்களில் அரும்பெரும் சாதனைகளை படைத்த பாரதிராஜா நாட்டுப்புறக் கதைகளை படங்களாகத் தருவதில் தனக்கு நிகர் தானே என்பதை நிரூபித்தவர்.

தமிழ்த் திரையுலகின் மூத்த திரைப்பட இயக்குநரான அவர், திரையுலகின் கோலோச்சக் கூடிய நடிகர்கள் பலரைத் திரையுலகிற்கு அறிமுகம் செய்துவைத்தவர்.

ஆம், பாரதிராஜா இல்லையென்றால், பேராற்றல் கொண்ட நடிகர்கள் நம் தமிழ்த் திரையுலகில் இல்லையென்றாகியிருக்கும்.

இஃது திரையுலகில் நாம் அறிந்த பாரதிராஜா பற்றிய சிறு குறிப்பு மட்டுமே.

மாறாக, ஈழத் தமிழர்களின் விடயத்தில் திரிகரண சுத்தியோடு எமக்காகக் குரல் கொடுத்த அற்புத மனிதர் பாரதிராஜா என்றால் அது சாலப் பொருத்துடையது.

ஆம், தமிழகத் திரையுலகம் ஈழத் தமிழர்களுக்காகக் குரல் கொடுப்பதில் ஒருபோதும் பின் நின்றதில்லை.

ஆம், நம் இனம் பேரினவாதிகளின் இனவாதப் பேயாட்டத்திற்கு ஆளாகி, அல்லலுற்றபோதெலாம் தென்னிந்தியத் திரைப்படக் குழுமம் எங்களுக்காக அகிம்சை வழிப் போராட்டங்களை நடத்தி, உலகின் பார்வையை ஈழத்தின் பக்கம் திசை திருப்பிய சாதனைக்குரியவர்கள்.

இவ்வாறு ஒட்டுமொத்தத் தென்னிந்தியத் திரைப்படத்துறையினர் நம் ஈழத் தமிழ் மக்களுக்காகக் குரல் கொடுக்க முற்பட்டதற்கு மூல காரணம் பாரதிராஜா போன்ற மூத்த தமிழ் திரைப்பட இயக்குநர்கள் என்றால் அது மிகையன்று.

உண்மை. ஈழத் தமிழ் மக்கள் உரிமை பெற்று, சுதந்திரமாக வாழவேண்டும் என தன் இறுதி மூச்சு வரை நினைத்தவர் அவர்.

யாழ்ப்பாணத்திற்கும் மட்டக்களப்பிற்கும் வருகை தந்த பாரதிராஜா; தமிழின் உயிர் மூச்சு என்பது ஈழத் தமிழர்களிடமே உண்டு என்ற பொருள்பட கருத்துரைத்தார்.

இதையும் கடந்து, ஈழத் தமிழர்கள் எதனையும் சாதிக்கும் வல்லமை கொண்டவர்கள் எனப் பகிரங்கமாகக்கூறி, எங்கள் ஈழத் தமிழ் இனத்தை உன்னதமான இடத்தில் வைத்தார்.

பற்றுறுதியோடு நம் மக்களை நேசித்தவர் - எமக்காக அனுதினமும் குரல் கொடுத்தவர் - அத்தகைய ஈழத் தமிழ்ப் பற்றாளர் பாரதிராஜா இன்று நம் மத்தியிலில்லை. அவரின் குரல் இனி எங்களுக்காக ஒலிக்கப்போவதில்லை.

ஆனாலும் எங்களை மானசீகமாக நேசித்து எங்களுக்காக - எங்கள் உரிமைக்காக ஒலித்த பாரதிராஜாவின் அந்தக் குரல் என்றும் எங்கள் ஈழத்தில் ஒலிக்கும்.

ஈழத் தமிழர்களின் வரலாற்றில் அது காவியமாகும் என்ற நிதர்சனத்தை அவருக்கான அஞ்சலியாக சமர்ப்பிக்கின்றோம்.

# 2026 உலகளாவிய அமைதிக் குறியீட்டில் 14 இடங்கள் முன்னேறி இலங்கை சாதனை

(கொழும்பு)

2026 ஆம் ஆண்டுக்கான உலகளாவிய அமைதிக் குறியீட்டில் இலங்கை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைப் பதிவு செய்துள்ளது.

பொருளாதாரம்மற்றும் அமைதிக்கான நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையின் படி, இலங்கை 14 இடங்கள் முன்னேறி உலகளவில் 67 ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

நாடுகளின் பாதுகாப்பு நிலை, சமூக ஸ்திரத்தன்மை, உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மோதல்களின் தாக்கம் உள்ளிட்ட பல்வேறு காரணிகளை அடிப்படையாகக் கொண்டு இந்தக் குறியீடு தயாரிக்கப்படுகிறது.

உலகளவில் அமைதி தொடர்ந்து 12 ஆவது ஆண்டாகவும் வீழ்ச்சியடைந்துள்ளதாக அறிக்கை தெரிவிக்கிறது. கடந்த ஆண்டுடன் ஒப்பிடுகையில் உலக அமைதி நிலை 0.7 சதவீதத்தால் குறைந்துள்ளது.

163 நாடுகள் உள்ளடக்கப்பட்ட இந்தக் குறியீட்டில், ஐஸ்லாந்து உலகின் மிகவும் அமைதியான நாடாக முதலிடத்தைப் பெற்றுள்ளது. நியூசிலாந்து இரண்டாவது இடத்தையும் சுவிட்சர்லாந்து மூன்றாவது இடத்தையும் பெற்றுள்ளன.

தெற்காசியப் பிராந்தியத்தில் இலங்கை 2.3 சதவீத அமைதி வளர்ச்சியைப் பதிவு செய்து பூட்டானுக்கு அடுத்தபடியாக இரண்டாவது அமைதியான நாடாகத் திகழ்கிறது.

அதேவேளை ஆப்கானிஸ்தான் தெற்காசியாவின் குறைந்த அமைதியைக் கொண்ட நாடாகப் பதிவாகியுள்ளதுடன் இந்தியா பிராந்திய தரவரிசையில் ஐந்தாவது இடத்தில் உள்ளது. *(நி)*

# போதைப்பொருள் வலையமைப்பு குவைத்தில் முற்றுகை

## 3 இலங்கையர்கள் உட்பட 7 பேர் கைது

(கொழும்பு)

குவைத்தில் போதைப் பொருள் கடத்தல்வலையமைப்புகளுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட விசேட முற்றுகை நடவடிக்கையின் போது, 3 இலங்கையர்கள் உட்பட மொத்தம் 7 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

போதைப்பொருள் கடத்தல் மற்றும் விநியோக நடவடிக்கைகளுடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக குவைத் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து போதைப்பொருட்கள் மற்றும் விசாரணைக்கு உதவும் முக்கிய ஆதாரங்கள் கைப்பற்றப்பட்டிருக்கலாம் என எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குவைத் பாதுகாப்பு அதிகாரிகள் முன்னெடுத்து வருகின்றனர்.

குவைத்தில் அண்மைக்காலமாக போதைப் பொருள் கடத்தல் மற்றும் விநியோக வலையமைப்புகளை ஒழிக்கும் நோக்கில் தீவிர நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. *(நி)*

# மருந்துப்பொருட்களை கடல்வழியாக கடத்த முயற்சி

## முறியடித்தது கடற்படை

சட்டவிரோதமான முறையில் கடல்வழியாக இலங்கைக்குக் கடத்திவரப்பட்ட பெருமளவிலான பீடி இலைகள் மற்றும் மருத்துவப் பொருட்களைப் புத்தளம், ஆலங்குடா கடற்கரைப் பகுதியில் வைத்து இலங்கை கடற்படையினர் நேற்று வியாழக்கிழமை (11) அதிரடியாகக் கைப்பற்றியுள்ளனர்.

வடமேற்கு கடற்படை கட்டளைக்குட்பட்ட விஜய கடற்படை முகாம் அதிகாரிகளால் ஆலங்குடா கரையோரப் பகுதியை அண்மித்த கடற்பரப்பில் நேற்று முன்னெடுக்கப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போதே இக்கடத்தல் முறியடிக்கப்பட்டுள்ளது.

இதன்போது எவ்வித உத்தியோகபூர்வ ஆவணங்களுமின்றி நாட்டிற்குள் கொண்டு வந்த பீடி இலைகள், 177 கிலோகிராமுக்கும் அதிகமான மருந்து மாத்திரைகள், சுமார் 354, 000 மாத்திரைகள், மருந்துக் களிம்புகள், 7,673 மருந்துப் பொதிகள், 118 போத்தல்கள் மற்றும் விசைப்படகு ஒன்று என்பன கைப்பற்றப்பட்டன.

கைப்பற்றப்பட்ட பல இலட்சம் ரூபா பெறுமதியான பீடி இலைகள், மருந்துப் பொருட்களின் துகள்கள் மற்றும் விசைப் படகு ஆகியன மேலதிக விசாரணைகளுக்காகவும் சட்ட நடவடிக்கைகளுக்காகவும் கற்பிட்டி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தப்பியோடிய சந்தேக நபர்களைக் கைது செய்வதற்குக் கற்பிட்டி பொலிஸார் தற்சமயம் விசேட விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். *(ந-7)*

# ஜூன் 15 முதல்

## தேசிய டெங்கு ஒழிப்பு வாரம்

(கொழும்பு)

நாடுமுழுவதும்டெங்கு நோய் பரவல் மிக அதிவேகமாக அதிகரித்து வருவதைக் கருத்திற் கொண்டு, அதனைத் தடுப்பதற்காக எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் 'விசேட டெங்கு ஒழிப்பு வாரம்' ஒன்றை பிரகடனப்படுத்துவதற்குத் தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு அதிரடி நடவடிக்கை எடுத்துள்ளது.

தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவின் சமூக வைத்திய நிபுணர் பிரஷிலா சமரவீர நேற்று ஊடகங்களுக்கு விடுத்த விசேட அறிவிப்பிலேயே இந்த விபரத்தை உத்தியோக பூர்வமாக வெளியிட்டார்.

டெங்கு நோய்பரவலை முழுமையாகக் கட்டுப்படுத்துவதற்காக இம்முறை உள்ளூராட்சி மன்ற மட்டத்தில் இந்த விசேட நுளம்பு ஒழிப்பு வாரத்தைச் செயற்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். *(நி)*

# யானை தாக்கியதில் வயோதிப மாது பலி

(திருகோணமலை )

திருகோணமலை - சேருவில, சுமேதங்கபுர பகுதியில் நேற்று வியாழக்கிழமை காலை யானை தாக்கி 73 வயதுடைய வயோதிப மாது ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யானை தாக்கி காயமடைந்த குறித்த வயோதிப மாது சேருவில வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு மாற்றப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். *(ந-7)*

# ஜோதிலிங்க தரிசனமும் அங்குரார்ப்பண நிகழ்வும்

ஜோதிலிங்க தரிசனமும் தியான நிலைய அங்குரார்ப்பண வைபவமும் இன்று வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு சங்கானை பிரதான வீதியில் அமைந்துள்ள பிரம்மகுமாரிகள் இராஜயோக நிலையத்தில் ஆரம்பமாகவுள்ளது.

நிகழ்விற்கு சங்கானைப் பிரதேச செயலகர் திருமதி. கவிதா உதயகுமார் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் முற்பகல் 10 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை இராமேஸ்வரர் ஜோதிலிங்க தரிசனம், இராஜயோக படவிறக்கக் கண்காட்டி, அகத்தை நோக்கிய பயணம் என்பன நடைபெறும்.

தொடர்ந்து சனி, ஞாயிறு மற்றும் திங்கள் ஆகிய மூன்று தினங்களும் காலை 9 மணி முதல் இரவு 8 மணிவரை நிகழ்வுகள் நடைபெறும்.

அனுமதி இலவசம். மேலதிக விபரங்களுக்கு 077 126 2658 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளலாம். *(8)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# வட மாகாணத்தின் தென்னை வளர்ச்சியை நோக்கி



தே.வைகுந்தன்,
உதவிப் பொது முகாமையாளர்,
தென்னைப் பயிர்ச் செய்கை
யாழ்ப்பாணம்.

2009 யுத்தத்திற்கு பின்னரான காலப்பகுதியில் இடம் பெயர்ந்து மீளக்குடியேறிய வடக்கு மாகாண மக்களின் மனங்களில் ஏற்பட்ட பொருளாதாரத் தீர்வு, அரசியல் தீர்வு மற்றும் அவர்களுடைய அடிப்படைத்தேவைகளுக்கான தீர்வுகள் இற்றை வரைக்கும் கேள்விக்குறியாகவும், பாரிய வெற்றிடமாகவும் எமது தமிழ் மக்களுக்கிடையே வியாபித்து காணப்படுகின்றது. அன்றைய காலப்பகுதியில் இருந்து இற்றைவரைக்கும் வடமாகாண மக்களின் ஏக்கம் ஆகக்கூடிய பொருளாதாரத்திலையாவது முன்னேற முடியுமா என்று பல்வேறு வழிகளில் முயற்சித்து பார்த்தாலும் இலங்கையின் பொருளாதார, அரசியல், சமூக சூழல் வடமாகாண மக்களது எதிர்பார்ப்பில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றது. அது மட்டுமல்லாது வடமாகாணத்தின் உள்ளக, அரசியல் தளம்பல்கள், ஒற்றுமையின்மை, தலை மைத்துவமின்மை மேலும் வடமாகாணத்து மக்களினது பொருளாதாரத்தை கீழ் நிலைக்கு கொண்டு செல்கின்றது.

இவ்வாறான சூழலில் மக்களது பொருளாதார பயிரான தென்னைப்பயிர்ச்செய்கை அனைத்து மக்களாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டு பயிரிடப்பட்டு பாரிய எழுச்சியை அடைந்து கொண்டு வருகின்றது என்பதனை வடமாகாணத்துக்குள் களத்தரிசிப்பு செய்யும் அனைவருக்கும் இலகுவாக புரிந்து கொள்ள முடியும். இவ்வாறான மக்களின் முயற்சியில் தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் பாரிய பங்கும் மக்களுடைய ஊக்கத்திற்கு பாலமாக அமைந்துள்ளது.

தென்னைப் பயிர்ச் செய்கையை கருத்தில் எடுக்கும் போது இது ஒரு செலவு மிகுந்த பயிர்ச்செய்கை என்பதோடு அதாவது தொழில்நுட்ப அடிப்படையில் முறைப்படி செய்ய வேண்டும் என்பதோடு தென்னம்பிள்ளைகள் மூன்று X மூன்று X மூன்று X அடி நீளம், அகலம், உயரம், ஆழமுள்ள குழியும், ஒரு தென்னம்மரத்திற்கும் மற்றைய தென்னம்மரத்திற்கும் இடையிலான இடைத்தூரம் 26 அடியும், ஒரு ஏக்கருக்கு 64 தென்னம்பிள்ளைகள் வீதமும், வெளியோரத்தில் இருந்து 8 அடி தூரத்தில் தென்னம்பிள்ளைகள் நடப்பட வேண்டும் என்பதுடன் தென்னங்குழியினை நிரப்புவதற்கு பொச்சு மட்டைகள், மாட்டெரு, பசளைகளுடன் கூடிய செலவுகளுடன் தென்னம்பிள்ளை (பையில் அடைக்கப்பட்டது) Poly Bag 550 ரூபாவும் தென்னம்பிள்ளை (பையில் அடைக்கப்படாதது) Bare Root 400 ரூபாய்ப் படியும் வேலையாட்களுக்கு ஏற்ற சம்பளத்தையும் சேர்த்து அதிக பணத்தினை முதலிட வேண்டும். அத்துடன் தொடர்ச்சியான பராமரிப்பு செலவாக பாத்தி அமைத்தல், நீர்ப்பாசன செலவுகளை எண்ணிப் பார்க்கும் போது வடமாகாணத்தில் ஒரு சாதாரணமான குடும்பத்தினால் இச் செலவுகளை செய்ய முடியாத நிலைமையில் உள்ளனர். இச் செலவுகள் அனைத்தையும் பாரிய முதலீடாக கருதினாலும் ஆரம்ப முதலீட்டை முதலிட முடியாது. மாகாணத்தின் தென்னை வளர்ப்பாளர்கள் கடந்த காலங்களில் விரும்பியோ, விருப்பமில்லாமலோ கைவிட்டு செல்லக் கூடிய நிலைமையிலும், அவர்களின் காணிகளில் உள்ள தென்னம்மரங்களில் ஏற்படும் தொடர்ச்சியான நோய்த்தாக்கங்களும், வெள்ளைப்பூச்சி, கருப்புவண்டு, செவ்வண்டு, தண்டுக்கசிவு போன்றவற்றினால் மரங்களுக்கு ஏற்பட்ட இழப்பினாலும் மக்களின் வறுமை நிலைமையினை மேலும் இக்கட்டான நிலைக்கு கொண்டு சென்றுள்ளது.



இவ்வாறான சந்தர்ப்பத்தில் தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் கடந்த கால செயற்பாடுகளான வடக்குமாகாண முக்கோண வேலைத்திட்டம் என்ற கருவினை வடிவமைத்து பாரிய அழுத்தங்களுக்கு மத்தியில் அனுமதி பெற்று இத்திட்டங்களுக்கு ஊடாக பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஒரு நிவாரணமாக மானியங்களினை வழங்குவதற்கான ஏற்பாடுகளை செய்துள்ளது. அந்த வகையில் வடக்குமுக்கோண வலய வேலைத்திட்டத்தின் ஊடாக 1/2 ஏக்கரிலிருந்து 50 Ac வரைக்கும் பையில் அடைக்கப்படாத தென்னம்பிள்ளைகள் (Bare Root) குறித்த விலை 400.00 ஐ முற்று முழுதாக இலவச மானியமாகவும் அதற்கு பொருத்தமான நீர்ப்பாசன வசதிகளினை செய்வதற்காக ஒரு ஏக்கரிலிருந்து 50 Ac வரைக்கும் 30000 ரூபா வரை நீர்ப்பாசன மானிய கொடுப்பனவாகவும் வழங்கி அம் மக்களினுடைய தென்னை வளர்ப்பு முயற்சியில் ஒரு சிறு பாலமாக இருப்பதற்கு நடவடிக்கை எடுத்துக்கொண்டு வருகின்றது. மேலும் வளர்ந்த 3 வருடத்திற்கு மேற்பட்ட தென்னம்பிள்ளைகளுக்கு உற்பத்தியினை கூட்டுவதற்கு 3kg APM, 1kg dolomite, மூடுபடையிட்டு பராமரிப்பு செலவாக ஒரு மரத்திற்கு 700 ரூபாய் வீதப்படியும் அதோடு இணைந்து அந்த தோட்டத்திற்கு நீர்ப்பாசனம் செய்வதற்காக ஒரு Acக்கு 50000 ரூபாயும் மேலும் கடந்த 2 வருடத்திற்குட்பட்ட தென்னைப் பயிர்களுக்கான பராமரிப்பு செலவாக ஒரு தென்னம் பிள்ளைக்கு 150.00 வீதப்படியும் தென்னம்பிள்ளைகளின் பாதுகாப்பிற்காக ஒரு தென்னம்பிள்ளைக்கு 500 ரூபாய் வீதப்படியும் வாயுத் துப்பாக்கியினை பெற்றுக் கொள்வதற்காக 25200 ரூபாய் அரைக்கொடுப்பனவு மானியங்களும் தொழில்நுட்ப அறிவுரையின் கீழ் ஒழுங்கமைந்த படிவங்களினை பூரணப்படுத்தி தகுந்த சட்டரீதியான ஆவணங்களின் கீழ் முன்னைய பின்னரான தொடர்ச்சியான நிலப் பரீசிலனையின் கீழ் வழங்குவதற்கான நிலைப்பாடுகளும் காணப்படுகின்றது.

மேலும் இம் மானியங்களினை பெறுவதற்கான தகைமைகளாக தென்னைப் பயிர்ச்செய்கையில் ஆர்வம் உள்ளவராகவும், பொருத்தமான காணி உள்ளவராகவும் அக் கிராமத்தின் கற்பகதரு சங்கத்தின் உறுப்பினராகவும் இருக்க வேண்டும் என்ற இலகுவான தகைமைகளையே மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளது. மேலும் இவ் வகையான மானியங்கள் அனைத்துமே 2026ஆம் ஆண்டுக்கு மட்டுமே பொருத்தமாக இருப்பதோடு வடமா காணத்தில் காணப் படுகின்ற நான்கு மில்லியன் தென்னம் பிள்ளைகளின் உற்பத்தியினை கூட்டும் பசளையாக MOP, APM பசளையினை மானிய விலையில் கற்பகதரு சங்கங் களுக்கு ஊடாக உரிய முறை யில் வழங்கிக் கொண்டு வருகின்றது.

அது மட்டுமல்லாது ஒவ்வொரு கிராமம்தோறும் தென்னை கற்பகதரு சங்கங்களினை உருவாக்கி அக்கிராமத்தில் வாழும் ஒரு தென்னை வைத்திருப்போரில் இருந்து பல நூறு தென்னை வைத்திருப்போர் அனைவரையும் ஒன்று சேர்ந்து சமூக நல்லிணக்க கட்டமைப்பை ஏற்படுத்தி தென்னையில் ஏற்படுகின்ற பாரியநோய்த் தாக்கங்களுக்கு விழிப்புணர்வு வேலைத் திட்டங்களையும் அம்மக்களுக்கான சுயசார்பு பொருளாதார தேவையையும் செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி வருகின்றனர்.

எமது தமிழ் சமூகம் எல்லா விதத்திலும் சமூக, பொருளாதார, அரசியல் சூழ் நிலையில் சிக்கி சின்னா பின் னமாகி சிதைந்து இருந்தாலும் தென்னை வளர்ப்பில் ஒற்றுமையாக இருக்க வேண்டும் என்பதனை சங்கங்களுக்கு ஊடாக வலியுறுத்தி வருகின்றது. குறிப்பாக வெள் ளைப் பூச்சி பாதிக்காத தென்னம் பிள்ளை இல்லாத வீடு என்று ஒன்றுமில்லை.

வடமாகா ணத்தின் 100% மக்களின் காணிகளில் இவ் வெள்ளைப் பூச்சியின் தாக்கம் காணப்படு வதோடு எவ்வாறு யுத்த காலத் தில் எமது மக்கள் பாதிக்கப்பட்டார்களோ அதே போல பொருளாதாரத்திலும் வெள்ளைப்பூச்சியின் தாக்கம் எமது மக்கள் அனைவரையும் மீண்டும் ஒரு தரம் ஒற்றுமையின் அவசியம் பற்றி கண் விழிக்க செய்துள்ளது.

இந்தச் சூழ்நிலையில் தென்னைப் பயிர்ச்செய்கை சபை யின் மானியச் செயற்பாடுகள் மக்களினுடைய பொரு ளாதாரத் தேவைகளினது அபிவிருத்தி பற்றியும் சுயசார்பு பற்றிய வேலைத்திட்டத்தினையும் அதிகரிக்கச் செய்துள்ளது. எதிர்வரும் காலங்களில் வடமாகாணத்தில் தென்னை வளம் சார்ந்தே அபிவிருத்தி செய்ய முடியும் என்ற எண்ணக்கருவினையும் ஏற்படுத்தியுள்ளது.

**தென்னைவளம் வடமாகாணத்தின் பலம்!**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவள்ளுவர்...

சபை முதல்வர் திருமதி மதிவதனி விவேகானந்தராஜா தலைமையில் ஆரம்பமானது.

இதன்போது 2014ஆம் ஆண்டு ஜூன் மாதம் 09ஆம் திகதி கைச்சாத்திடப்பட்ட இருதரப்பு உடன்படிக்கைக்கு அமைவாக திருவள்ளுவர் கலாசார மையத்தை யாழ்ப்பாணம் மாநகர சபையிடம் விரைவாக ஒப்படைக்க வேண்டும் எனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

அத்துடன் நம்பிக்கை பொறுப்பு என்ற விடயத்தில் எந்த விதத்திலும் யாழ்.மாநகரசபை உடன்படவில்லை என்பதனையும் வலியுறுத்தி இலங்கை புத்த சாசன கலாசார அமைச்சு மற்றும் இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் ஆகியோருக்கும் இக் கோரிக்கையை அனுப்பி வைக்கவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. (ந-7,104)

## ஒன்றுபட்டுச்...

தேவையாகவுள்ளது.

தற்போதைய காலத்தில் பிரிந்து செயற்படும் அரசியல் அணுகுமுறைகள் பலனளிக்காது என முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க, நாட்டின் தற்போதைய அரசியல் சூழ்நிலையையும் எதிர்கால சவால் களையும் எதிர்கொள்வது தொடர்பில் கருத்துரைக்கையிலேயே அவர் மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்துரைத்த அவர், நாட்டின் நிலைத்தன்மை, ஜனநாயக நடைமுறை மற்றும் பொருளாதார வளர்ச்சி ஆகியவற்றை பாதுகாக்க அரசியல் தரப்புகள் இடையே உரையாடலும் ஒத்துழைப்பும் அதிகரிக்கப்பட வேண்டும்.

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அரசியல் மற்றும் சமூக சவால்களை எதிர்கொள்வதற்கு ஒருமித்த தேசிய அணுகுமுறை அவசியம் என்றார். (ந-7)

## நீதியரசர்...

கும் மேலாக வெற்றிடமாக உள்ள போதிலும் அவற்றை நிரப்புவதற்கு அரசாங்கம் தவறியுள்ளமை குறித்து எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச நேற்றுப் பாராளுமன்றத்தில் விசனம் வெளியிட்டுள்ளார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27/2 இன் கீழ் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர், இந்த இரு நீதிமன்றங்களினதும் வெற்றிடங்களை நிரப்புவதில் ஏற்பட்டுள்ள காலதாமதம் காரணமாக சில தொழில்முறை நீதிபதிகள் பதவிகளிலிருந்து ஓய்வுபெற்றுள்ளதாகத் தெரிவித்தார்.

அமைப்பியல் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக ஆட்சிக்கு வந்த அரசாங்கம், நீதியரசர்களை நியமிப்பதில் தாமதம் ஏற்படுத்துவது பொருத்தமான தொன்றல்ல என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ந-7)

## பசிலுக்கு...

பவம் தொடர்பான விசாரணை நீதிமன்றத்தில் மீண்டும் எடுத்துக் கொள்ளப்பட்ட போதே குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவினருக்கு நீதிவான் இந்த அறிவித்தலை விடுத்துள்ளார்.

கடந்த 2014ஆம் ஆண்டு சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்துக்கு ஒதுக்கப்பட்டிருந்த 7.8 மில்லியன் ரூபாய் நிதியை, அதன் ஊக்குவிப்பு நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தாது ஊவா மாகாண சபை தேர்தலுக்காக 12,000 ரி-சேர்ட்டுகளைப் பெற்றுக்கொண்டு அரசாங்கத்துக்கு நட்டமேற்படுத்தியமை தொடர்பில் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சட்டவிரோத சொத்துக்கள் விசாரணைப் பிரிவு நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்திருந்தது.

வழக்கு விசாரணையின்போது, வழக்கின்முதலாவது சந்தேகபரான முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவுக்கு அறிவித்தல் ... மாறு குற்றப் ...

களத்தினர் நீதிமன்றத்திடம் கோரிக்கை விடுத்தனர்.

எனினும் ஆரம்பத்திலேயே இவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் மீண்டும் அறிவித்தல் விடுக்க வேண்டிய அவசியமில்லை என நீதிவான் சுட்டிக்காட்டினார். மாறாக தேவையெனின் சர்வதேச பிடியாணையைப் பெற்றுக்கொள்வதற்கான அடுத்தகட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறு அவர் அறிவுறுத்தினார். (ந-7)

## அதிகரிக்க...

படவில்லை என்று நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார நேற்று (11) பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

பாராளுமன்ற நிலையியற் கட்டளை 27(2) இன் கீழ் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நீதிபதிகள் தவிர ஏனைய தொழில் வல்லுநர்களும் தங்களது ஓய்வு பெறும் வயதை அதிகரிக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளதாக அமைச்சர் இதன்போது சுட்டிக் காட்டியுள்ளார்.

இந்தக் கோரிக்கைகளை அரசாங்கம் நியாயமான முறையில் பரிசீலித்து வருவதாகக் குறிப்பிட்ட அவர், இவற்றில் சில கோரிக்கைகள் நியாயமானவையாக இருக்கும் அதேவேளை, ஏனையவை அரசியல் பின்னணியைக் கொண்டவை என்றும் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இந்த விடயம் தொடர்பில் இதுவரை எந்தவொரு உத்தியோகபூர்வமான தீர்மானமும் எடுக்கப்படவில்லை என்றார். (ந-7)

## ஈரா...

டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

"அமெரிக்கா இன்று இரவு ஈரான் மீது மிகக் கடுமையாகத் தாக்கப் போகிறது. வெகு தொலைவில் இல்லாத எதிர்காலத்தில், ... எண்

ணெய் உட்கட்டமைப்புப் பகுதிகளைக் கைப்பற்றுவோம்" என்று குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வெனிசுவேலாவுடன் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையைப் போலவே, ஈரானின் எண்ணெய் மற்றும் எரிவாயு சந்தைகளின் முழுமையான கட்டுப்பாட்டையும் அமெரிக்கா ஏற்கும் என்றார். (ந-7)

## அதிக காற்றுடன்...

விடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, காங்கேசன்துறையிலிருந்து மன்னார் ஊடாக கற்பிட்டி வரையான கடற்கரைக்கு அப்பாலுள்ள கடற்பரப்புகளில் காற்றின் வேகமானது அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 60 - 70 கிலோமீற்றர் வரை அதிகரிக்கக்கூடும் என்படுடன் குறித்த கடற்பரப்புகள் அவ்வப்போது மிகவும் கொந்தளிப்பாகக் காணப்படும் என வளிமண்டலவியல் திணைக்களத்தின் அறிவிப்பில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ந-7)


மஹஜன சம்பத — திகதி 2026.06.11 — சீட்டிழுப்பு இலக்கம் 6215 — K 5 2 3 3 5 5
அத சம்பத — K 3 3 5 5 — சீட்டிழுப்பு இலக்கம் 0790

சுப தவசக் — திகதி 2026.06.11 — சீட்டிழுப்பு இலக்கம் 8331 — கன்னி 51 59 65 — 2967

தன நிதானய — திகதி - 2026.06.11 — சீட்டிழுப்பு இலக்கம் - 2245 — J 45 52 56 78 J

மெகா பவர் — திகதி 11/06/2026 — சீட்டிழுப்பு இலக்கம் 2563 — Q 06 03 24 55 77

ஜய — திகதி 2026.06.11 — சீட்டிழுப்பு இலக்கம் 0483 — Y 2 5 2 9

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 4457 — சீட்டிழுப்பு திகதி 11.06.2026 — C 30 41 46 55

ஹந்தஹன HANDAHANA — உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2026.06.11 — சீட்டிழுப்பு இலக்கம் 1524 — சிம்மம் 12 21 42 54 சிம்மம்

உத்தியோகபூர்வ முடிவுகள் — 11.06.2026 — வெற்றி வாரம் 0923 — B 2 9 1 1 2 5 — அடுத்த சுப்பர் பரிசு ரூ.21,165,808.80 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 3189 — 25000 பணப் பரிசு 62014 — சீட்டிழுப்பு திகதி 2026.06.11 — தினம் வியாழக்கிழமை — 25 41 64 77 O — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.133,522,326.40

சனிதா — திகதி 11.06.2026 — வெற்றி வாரம் 5350 — 09 21 23 29 P — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,633,501.20 — 45780

சசிரி — வெற்றி வாரம் 1019 — சீட்டிழுப்பு திகதி 11.06.2026 — வியாழக்கிழமை — 05 16 40 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.4,326,080.00

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4901 — சீட்டிழுப்பு திகதி 11.06.2026 — தினம் வியாழக்கிழமை — 01 02 53 56 துலாம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.3,000,000.00

லக்பதி — ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — T 35 05 28 34 55 — 2365 — 11.06.2026 வியாழக்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.290,274,154.40

அத கோட்டிபதி ADA KOTIPATHI — வியாழக்கிழமை — வெற்றி வாரம் 3015 — சீட்டிழுப்பு திகதி 2026.06.11 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.58,980,557.60 — 09 38 44 52 Q


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காணி விற்பனைக்கு

- கந்தரோடையில் பாதை முகப்புடன் 2 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட காணித் துண்டுகள்
- ஆனைக்கோட்டையில் 2 மற்றும் 3 பரப்புகளாகப் பிரிக்கப்பட்ட காணித் துண்டுகள்
- கொழும்புத்துறையில் 1 பரப்பு சுற்று மதிலுடன் கூடிய வடக்கு வாசல் வீடு நியாயமான விலையில்

(7832)

தொடர்புகளுக்கு: 076 105 6343



## மணப்பெண் தேவை

01. குப்பிழான், இந்து, 1990, கேட்டை, MPH, MHA and MBA, PHD Reading, Canada citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (46762)
02. இணுவில், இந்து, 1990, அனுஷம், Quantity Serviour, Australia Citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (34984)
03. காரைநகர், இந்து, 1992, சுவாதி, Bachelor of Health science (Deakin University), New zealand citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (49974)
04. இளவாலை, இந்து, 1994, மகம், Bsc computer Engineering (UK), UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (53872)
05. கோண்டாவில், இந்து, 1993, உத்தரம், Bsc, Structural Engineering, Civil Engineer, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (58653)
06. நெடுங்கேணி, இந்து, 1987, ரேவதி, Master of Engineering, Civil Engineering and Business, Medical of science at Australia, Australia citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (32687)
07. மட்டுவில், இந்து, 1985, கேட்டை, B.Eng (HONS) computer Network Engineering (University of East London), UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (51409)
08. கொக்குவில், இந்து, 1983, திருவோணம், Msc in Teasting Engineering, UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (30712)
09. கொல்லங்கலட்டி, இந்து, 1991, MSc in Economics and marketing (copenhagen university) Business, Denmark citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (52531)
10. கரவெட்டி, இந்து, 1991, பூராடம், Electric and Electronics Engineering (UK), UK citizen மாப்பிள்ளைக்குப் பெண் தேவை. (35946)

நீங்களாகவே எமது www.thaalee.com என்கின்ற website இல் உங்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

(C-5819)

S.Sharma J.P | 077 189 0367
www.thaalee.com | 077 539 3728


## குமரன்...

இந்த உயர்மட்ட விசாரணையின் ஒரு பகுதியாக, முன்னாள் இராணுவத் தளபதியும் ஃபீல்ட் மார்ஷலுமான சரத் பொன்சேகா இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

கடந்த 2009 மே மாதம் விடுதலைப் புலிகளின் தலைமை அழிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அந்த அமைப்பின் தலைவராக கே.பி. உருவெடுத்ததாக தகவல்கள் வெளியாகின.

எனினும், அதே ஆண்டு ஓகஸ்ட் மாதம் மலேசியாவின் கோலாலம்பூரில் வைத்து இலங்கை உளவுத்துறை மற்றும் சர்வதேச பாதுகாப்புப் படைகளின் கூட்டு நடவடிக்கையின் மூலம் அவர் கைது செய்யப்பட்டு, இரகசியமாக இலங்கைக்குக் கொண்டு வரப்பட்டார்.

அதன் பின்னர் அவர் அரசாங்கப் பாதுகாப்பில் வைக்கப்பட்டு, சமூக சேவை மற்றும் அரசியல் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டதாக கூறப்பட்டது. இந்த நிலையில், கே.பி. கைது செய்யப்பட்ட போது அவரிடமிருந்த ஏகப்பட்ட தொன் தங்கம் அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டதாகக் கூறப்படும் பின்னணியில் அதற்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழு விசாரணைகளை முடுக்கி விட்டுள்ளது.

இது குறித்து ஆணைக்குழுவில் வாக்குமூலம் அளித்த பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய சரத் பொன்சேகா, 2009 இல் கே.பி. கைது செய்யப்பட்டபோது அவரிடமிருந்த தங்கம் அரசாங்கத்தாலும் பாதுகாப்பு அதிகாரிகளாலும் கைப்பற்றப்பட்டதாக இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவிற்குத் தகவல் கிடைத்துள்ளது. இது குறித்து எனக்கு என்ன தெரியும் என்று கேட்பதற்கே நான் அழைக்கப்பட்டேன். ஆனால், கே.பி. கைது செய்யப்பட்ட அந்தச் சமயத்தில் நான் இராணுவத் தளபதியாகப் பணியாற்றவில்லை. மாறாக, பாதுகாப்புப் படைத் தலைமைத் தளபதியாகவே பதவி வகித்தேன். எனவே, அவரிடமிருந்து ஏதேனும் பொருட்கள் கைப்பற்றப்பட்டிருந்தால் அது குறித்த விவரங்கள் எனக்குத் தெரியாது.

அதே ஆண்டு நவம்பர் 16 ஆம் திகதி நான் அந்தப் பதவியிலிருந்தும் ஓய்வு பெற்றுவிட்டேன் என்ற விபரத்தையே ஆணைக்குழுவிடம் விளக்கியுள்ளேன் என்றார்.

இதன் படி, தனது பதவிக் காலத்தில் கே.பி. தொடர்பான விவகாரங்களில் தமக்கு எவ்விதத் தொடர்பும் இருக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில், போருக்குப் பிந்தைய காலத்தில் கைப்பற்றப்பட்ட இந்தச் சொத்துக்களின் பாதுகாப்பு மற்றும் பொறுப்புக்கூறல் தன்மையை உறுதிப்படுத்துவதற்காக, இந்தத் தங்க இருப்புக்கள் யாரிடம் ஒப்படைக்கப்பட்டன என்பது குறித்த விசாரணையை ஆணைக்குழு தற்போது தீவிரப்படுத்தியுள்ளது. (ந-7)


## DCM - யாழ்நகர்

மாபெரும் புவியியல் கருத்தரங்கு

P.S.V.தினேஸ் (m.phill in geography)

13.06.2026 சனி 12.00 - 4.00 மணி வரை
(20 மணித்தியாலங்கள்)

(C-5821)

நிர்வாகம் - 077 778 9815



## வைத்தியம்

கை விறைப்பு | கால் விறைப்பு | கை எரிவு | கால் எரிவு
குழந்தை இன்மை | நாட்பட்ட தலைவலி | மூலம் | கழுத்து வலி
கால் பாத விறைப்பு | முள்ளந்தண்டு வலி | முழங்கால்,
குதி வலி | Sciatica | Rheumatic Arthritis
நாட்பட்ட சளி | இருதயவலி | வாதம் | வயிற்றுப்புண் |
Gastrtis | அல்சர் மிகச்சிறந்த மூலிகை, நம்பிக்கையான
மூலிகை, Acu சிகிச்சைகள் | சிக்கின் குனியாவால்
ஏற்படும் மூட்டு, தசை, பாத வலிகள்

நல்லூர், யாழ்ப்பாணம்.


Dr R. சிவகுருநாதன் (SLAMC REGD)

தொடர்புகளுக்கு : 0777 301 669

(7833)

நிபந்தனைகளுக்கு உட்பட்டது


## ஆத்மசாந்திப் பிரார்த்தனை அழைப்பு



கடந்த 13.05.2026 ஏகாதசி உத்தரட்டாதியில் சிவபதமடைந்த
எமது அன்புக்குரிய குடும்பத் தலைவி

### திருமதி தவமணி சிவபாலன்

அவர்களின் நினைவாக பராபவ வருடம் வைகாசி 30 ம் நாள் (13.06.2026) சனிக்கிழமை பல முதியோர் இல்லங்களில் சுகாதார மேம்பாட்டுக் கலந்துரையாடல், மர நடுகை, மதிய போசனம் ஆகிய நிகழ்வுகள் நடைபெற இருக்கின்றன.

நாளை (13.06.2026) மு.ப 10.30 மணியளவில் தொல்புரம் சிவபூமி முதியோர் இல்லத்தில் நடைபெற இருக்கும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் கலந்துகொள்வதுடன் தொடர்ந்து இடம்பெற இருக்கும் மதிய போசனத்தில் அங்கிருக்கும் எமது மூத்த உறவுகளுடன் இணைந்து பங்கேற்குமாறு உங்கள் அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கிறோம்.

எமது குடும்பத் தலைவியின் பிரிவுத்துயரில் பல வழிகளில் பங்கு கொண்டு ஆறுதல் வழங்கிய உங்கள் அனைவருக்கும் எமது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல் :
இராஜநாயகம் குடும்பம் | சிவன்சுதன் குடும்பம்
சத்தியபாலன் குடும்பம் | சுரேஷ்குமார் குடும்பம்

(C-5817)

## பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்

பகிர்வதற்கு முன் சிந்தியுங்கள்
ஒவ்வொரு பகிர்வுக்கும் பின்விளைவுகள் உள்ளன.

வெறுப்பையும் பிரிவினையையும் தூண்டும் தகவல்களை உணர்ச்சிவசப்பட்டோ அல்லது திட்டமிட்டோ பகிர்வது கோபத்தையும் வன்முறையையும் அதிகரிக்கிறது.

இத்தகைய பெரும்பாலான கட்டுக்கதைகள் மக்களின் உணர்வுகளை தன்னலத்திற்காக மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்டு மறைமுக அரசியல் நிகழ்ச்சி நிரலுக்கு அமைவாக பரப்பப்படுகின்றன.

**நிறுத்துங்கள், சிந்தியுங்கள், உறுதிப்படுத்துங்கள்**
வெறுப்பின் கருவியாக மாறாதீர்கள்.

இந்தத் தகவல் SOND அமைப்பினால் ஐ.நா இலங்கை மற்றும் UNICEF இலங்கையின் ஆதரவுடன் வழங்கப்படுகிறது.

(7775)


## உடன் விற்பனைக்கு

- யாழ். ஆஸ்பத்திரி வீதியில் 2 கடைகளும்
- யாழ். மின்சார லேன் வீதியில் 2 கடைகளும்
- யாழ். கஸ்தூரியார் வீதியில் 2 கடைகளும்
- யாழ். ஸ்ரான்லி வீதியில் மக்கள் வங்கிக்கு அண்மையில் 2 கடைகளும்
- யாழ். ஸ்ரான்லி வீதியில் இலங்கை வங்கிக்கு அண்மையில் 2 கடைகளும்
- யாழ். வைமன் வீதியில் 3 பரப்பு, 2 பரப்பில் அமைந்த 2 வீடுகளும்
- யாழ். பிறவுண் வீதியில் 2 வீடுகளும் உடன் விற்பனைக்குண்டு.

(C-5816)

தொடர்புகளுக்கு: க.தர்மகுலசிங்கம்
378, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
0777 232 535



வலம்புரி விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378 | 076 097 3127


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2026 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media